அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 45 | பெப்ரவரி 2025 | திருவள்ளுவர் ஆண்டு 2056



தாய்மை

அவள்



கிளீன் தையிட்டி

அனுரவின் யாழ் விஜயத்தின் அரசியல் செய்தி



சாந்தனுக்கு துயிலாலயம் அங்குரார்ப்பணம்



இலங்கை அரசியல் வரலாற்றில் மஹிந்தவின் இடம்



அனுரவின் யாழ் விஜயத்தின் அரசியல் செய்தி



# ஏதிலி

முல்லை பகலவன்

குயிலுக்கு வீடு
காகத்தின் கூடு !
பனித்துளி வாழ்வது
புல் நுனியோடு !

தேன் துளி வசிப்பது
மலருக்குள்!
சிறு பிறை வாழ்வது
முழு நிலவுக்குள்!

காற்றுக்கு முகவரி
தென்றல் !
கடலுக்கு முகவரி
அலைகள் !
முகிலுக்கு முகவரி
மேகம்!
மூச்சுக்கு முகவரி
சுவாசம் !

தமிழா!!
உன் முகவரி அறிவாயா ?
ஏக்கங்கள் சுமந்து!
கனவுகள் கலைந்து!
ஏதிலிகளாய்
எட்டுத் திக்கும்
அலைகின்றாய்!
ஒன்றை நினைவில்
கொள்!!
ஒட்டுமொத்தமாய்
முட்டித் தள்ளு!!

மேற்கில் கூட சூரியன்
முளைக்கலாம்!
பிரிந்து நின்றால் - நீ
கிழக்கை
கிழித்தெறிந்தாலும்
விடியல் உனக்கு கானல்
தான்!

எழுநிலம்
EZHUNILAM
மாத இதழ் | மணம்: 45
பெப்ரவரி

தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


ஆசிரியர் கருத்து... 05
அனுரகுமார செல்லும்... 06
இலங்கை அரசியல்... 09
தாய்மை (கவிதை)... 13
அனுரவின் யாழ்.... 14
கிளீன் தையிட்டி... 18
அவள் (கவிதை).... 21
வாசிப்பு... 22
நெல்லா? வைக்கோலா?... 24
விடுதலை (கவிதை)... 26
மாவையின் அரசியல்... 27
லசந்த விக்கிரமசிங்கவிற்கு... 30
வைரசாக பெருகும்.... 33
எதுவும் சில காலம் (கவிதை)... 35
யார் நீதிமான்கள்?... 36
வாழ்க்கை முறை... 39
வளர்ப்பிலே தவறுண்டோ?... 41
ஹைக்கூ... 43
பிரபாகரன் ஒரு... 44
தீஞ்சுவை மொழி (கவிதை)... 46
வலை (நெடுங்கதை)... 47




## திருக்குறள்

### குறள் 098:

"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்"

### விளக்க உரை:

சிறுமைத்தனமற்ற இனியசொல் ஒருவனுக்கு
அவன் வாழும் போதும், வாழ்ந்து
மறைந்த பிறகும் புகழைத் தரக் கூடியதாகும்.















# அக்கறை உறவுகள்

இம்முறை அட்டைப்படம் எப்படி வரப்போகிறதோ என்று காத்திருந்தேன். பரவாயில்லை. இம்முறையும் அசத்தி விட்டீர்கள். அரசி அரசியல் ஆசிரியர் தலையங்கமும் அருமை. தமிழர் பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டதா என்ற தலைப்பே இல்லை என்பதை சொல்லி விட்டதே.

**-காயத்ரி வேணுகோபன்**
**மெல்போர்ண், அவுஸ்திரேலியா.**

எழுநிலம் மணம் 44 பார்த்தேன். கட்டுரைகள் அருமையாக இருந்தன. நீளமாக இருந்தாலும் ஒரு வரி விடாமல் படித்தேன். ஆசிரியர் தலையங்கத்திற்கு நல்ல பொருளைத் தேர்வு செய்து எழுதியிருக்கிறீர்கள். வாழ்த்துகள். கவிதைகள் நன்றாக இருந்தன. தொடராக வந்த வலை என்ற கதையைக் காணவில்லையே. நாட்டை விட்டு வந்த என் போன்றவர்களுக்கு அந்தக் கதை சுவாரசியமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தயவு செய்து நிறுத்திவிடாதீர்கள்.

**-சுந்தரமூர்த்தி வேலுப்பிள்ளை**
**பாரிஸ், பிரான்ஸ்.**

பாதுகாப்புத் துறை என்றுதான் நேர்மையாக நடந்தது இப்போது சரியாகிப் போவதற்கு? இனவாத அரசாங்கங்களின் கீழ் கடத்தல்கள், கைதுகள், துப்பாக்கிச்சூடுகள் எல்லாமே சாதாரணமானவைதானே. காணி அபகரிப்பை இன்னமும் தொடரும் அரசு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நல்லது செய்யும் என்று இன்னுமா நம்புகிறீர்கள்? அனுபவம் என்ற கதை உண்மையிலேயே பிரயோசனமான ஒன்று. இதுதான் இன்று அநேக குடும்பங்களுக்கிடையில் நடக்கிறது.

**-மதி சுதாகரன்**
**பெல்ஜியம்.**

புதிதாகப் பரவும் வைரஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுக்கு நன்றி. பொங்கல் கவிதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பங்களாதேசில் பாக்கிஸ்தான் மீளவும் கால் பதிப்பது இந்தியாவுக்கு பெரிய தலையிடியாக இருக்கும். அவர்களுக்கு இது வேண்டும். தகவலுக்கு நன்றி. உண்மையாக இருக்குமோ கதை சூப்பர். பகிடியாகவும் அதே சமயம் பயனுள்ளதாகவும் இருந்தது. தாயக தகவலைத் தரும் வலை கதைக்கு என்ன நடந்தது?

**-ஸ்ரெல்லா அன்ரனி**
**டோட்மண்ட், ஜேர்மனி**

கட்டுரைகள் பெரிதாக இருந்தன, அதே சமயம் சில கட்டுரைகள் மிக நன்றாகவும் இருந்தன. கட்டுரைகள் பலவற்றில் அவற்றை எழுதியவர் பெயர் இல்லாமல் இருந்தது ஒரு குறை. வழமையாக எழுதும் ஐங்கரன், நவீனன் அவர்களையும் காணவில்லை. தவற விடப்பட்டிருக்குமோ? கலை அமுதினியின் கதை சுமார் ரகம் என்றாலும் நடப்பில் உள்ள ஒரு விடயம். கவிதைகள் சிறிதாக இருந்தாலும் அழகாக மனதைத் தொட்டன.

**-காந்தினி நாராயணன்**
**நியூசிலாந்து.**

மாவையார் இறந்து விட்டதால் அவரைப் பற்றி தவறாகச் சொல்ல மனம் வரவில்லை. அவர் இளம் வயதில் இருந்தபோது உண்மையாக உழைத்ததுதான் இன்றுவரை அவர் அரசியலில் தாக்குப் பிடித்திருக்க ஒரே காரணம். ஒரு வேதனைதான்.

போகும் முன்பாவது கட்சிக்குள் நல்ல திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கலாம். வயதானவர்கள் பற்றிச் சொன்னீர்களே அத்தனையும் உண்மை. இப்போதைய சந்ததிக்கு அவர்களுடன் செலவிட எங்கே நேரம் இருக்கிறது?

**-மனோன்மணி திருநாவுக்கரசு**
**ரூட்டிங், இங்கிலாந்து.**

கட்டுரைகள் அருமையாக இருந்தாலும் இங்கு பிரச்சனைகள் அதிகம் இருக்கின்றன. தயவுசெய்து அவற்றை வெளிக் கொண்டு வாருங்கள். தாய்மண் பற்றிய உணர்வு இங்கு திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. போராட்ட குணமும் விடாமுயற்சியும் உள்ள தமிழன் இங்கு நடைப்பிணங்கள் போல இருப்பது வேதனையாக இருக்கிறது. இளைய தலைமுறையின் கல்வித் தரமும் இப்போது முன்பு போல் இல்லை. படித்தவர்கள் விகிதாசாரம் நன்கு குறைந்து விட்டது. தயவு செய்து இவற்றை வெளிக்கொணர்ந்து ஆவன செய்யுங்கள்.

**-வன்னியன்**
**கிளிநொச்சி, தாயகம்.**

ஈழச் செய்திகள் என்னை எப்போதும் வியக்க வைக்கின்றன. ஈழத்தில் பிறந்திருக்கலாம் என்று எப்போதும் ஒரு ஏக்கம் எனக்குண்டு. நீங்கள் வெளியிடும் பத்திரிகை தமிழ்நாட்டு பத்திரிகைகளுக்கு இணையாக, சில சமயங்களில் அதை விடவும் உயர்ந்த தரத்தில் இருப்பதாக நான் கருதுகிறேன். நாங்களும் எழுதலாமா என்றும் பத்திரிகையை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளலாமா என்று கேட்டதற்கும் ஆம் என்று பதிலளித்திருந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி.

**-கல்யாணி நெடுமாறன், மடிப்பாக்கம், சென்னை.**

கவிதைகள், அறிவுரைக் கதைகள் சூப்பர். கட்டுரைகள் நீளமோ நீளம். அப்பப்பா வாசித்து முடிப்பதற்குள் உயிர் போய் உயிர் வந்து விட்டது.

தொடர்கதை, வழமையாக எழுதுபவர்கள் என்று பல விடயங்கள் காணாமல் போய் விட்டன. ஆனாலும் பத்திரிகை வழமைபோல அட்டகாசம். உங்கள் பத்திரிகை பற்றி மிக நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. உங்கள் சேவை தொடரட்டும்.

**-நிவேதிதா லாரன்ஸ், அர்மா, அயர்லாந்து.**





**எழுநிலம் சஞ்சிகையின் கடந்த மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின் இணையத்தளத்தில் இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...**
**https://www.noolaham.org**

ஆசிரியர் பக்கம்

# போராட்டமே தீர்வாகும்

**தையிட்டி** விகாரை விவகாரம் மீண்டும் பேசு பொருளாக மாறியுள்ளது என்று கூறப்படுவதை கேட்டு விட்டு நாம் கடந்து போக முடியாது. இப்போதுதான் மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டுகிறார்கள் என்ற சிலரின் பிரசாரத்தில் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது. தையிட்டி விகாரை ஒன்றும் இன்று நேற்றுக் கட்டப்பட்டதல்ல. பல வருடங்களுக்கு முன்னர் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு விகாரை கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது சில தமிழ் அரசியல்வாதிகளுக்கும் ஊடகங்களுக்கும் கூடத் தெரிந்திருந்தது.

தமக்கான அரசியல் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இவற்றை மக்கள் காதுகளுக்குப் போக விடாமல் மூடி மறைத்ததில் தமிழ் அரசியற் கட்சிகளுக்கு பெரும் பங்குண்டு. அப்போதே மக்களுக்கு அம்பலப்படுத்தி தீவிர எதிர்ப்பைக் காட்டுவதில் மக்களை ஒன்றிணைந்திருந்தால் இத்தகைய விமர்சனங்கள் எழுந்திராது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த ஆடம்பரமான விகாரைத் திறப்பு விழாவின் பின்னரே மக்களின் எதிர்ப்பு வெளித்தெரியத் தொடங்கியுள்ளதாக தவறான அபிப்பிராயமும் வந்திராது.

இன, மத நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசும் புதிய அரசு தனக்கும் முந்தைய அரசுகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பதை தெள்ளத் தெளிவாகக் காட்டி விட்டதானது, புதிய அரசு தங்கள் பிரச்சனைகளையெல்லாம் தீர்த்து ஒரு சுகபோக வாழ்வைத் தரப் போகிறது என்ற நம்பிக்கையுடன் தங்கள் வாக்குகளை அள்ளிக் கொடுத்த தமிழ் மக்களுக்கு வீழ்ந்த அடி.

மக்கள் காணிகளை அடாத்தாகப் பிடித்து அதில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை அகற்ற இந்த அரசும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிதானும் வழங்கவில்லை. தங்கள் காணிகளை இழந்து, வீடு வாசலற்று இடம்பெயர்ந்திருக்கும் அந்த மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான எந்த வழிவகையையும் செய்து கொடுக்க இந்த அரசும் தயாராக இல்லை.

இன, மத நல்லிணக்கம் பேசும் அரசு இந்துக் கோயில்கள் இடிக்கப்படும்போது எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. நீதிமன்ற உத்தரவுகள் மீறப்படும்போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், கட்டி முடிக்கப்பட்ட விகாரையை அகற்றுவதால் மத நல்லிணக்கம் கெட்டுவிடும் என்று பயப்படுகிறது சிங்கள அரசு. இந்துக் கோயில்கள் இடிக்கப்படும் இடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதை எதிர்க்கும் தமிழ் மக்கள்மீது இனவாத சாயம் பூசப்படுகிறது.

தமிழர் நிலங்களை அபகரிக்கவென வந்து அடாவடித்தனம் செய்யும் பிக்குகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. நீதித்துறைக்கு கட்டுப்படாதவர்களாக பிக்குகள் இருக்கிறார்கள். ஆனால் அமைதி முறையில் தமது நியாயமான கோரிக்கைகளுக்காக எதிர்ப்பைக் காட்டும் தமிழ் மக்கள் கைது செய்யப்படுகிறார்கள், விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தப்படுகிறார்கள்.

இனியும் இங்கு தமிழர்களுக்கான நீதி வழங்கப்படும் என்று நம்புவதற்கு எந்த முகாந்தரமுமில்லை. தென்னிலங்கையில் நடைபெறும் துப்பாக்கிச் சூடுகளும் நீதிமன்ற வளாகத்திலேயே நடந்த கொலையும் அரசால் சிங்களர்களுக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது என்பதை தெளிவாக காட்டுகின்றன.

பாதாள உலகக் குழுக்களிடையே நடக்கும் மோதல் என்று அரசு சப்பைக்கட்டு கட்டினாலும் தமக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று முன்னாள், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் சனாதிபதிகளும் பதறுவது ‘எங்கப்பன் குதிருக்குள் இல்லை’ என்பதை அப்பட்டமாக தெரிவிக்கின்றன. முன்னைய ஆட்சியாளர்கள் செய்த கொலைகளின் சாட்சியங்கள் அழிக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் எல்லோர் மனதிலும் உண்டு.

இந்த நிலையில், எங்கள் பிரச்சனைகளை யாரும் கண்டு கொள்ளப் போவதில்லை. எமது காணிகளுக்காகவும், எமது வழிபாட்டுத் தலங்களுக்காகவும், இன்னும் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது உரிமைகள் அனைத்திற்காகவும் நாம்தான் குரலை உயர்த்த வேண்டும், போராடியாக வேண்டும். இதற்கு எந்தக் கட்சியிலும் உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற அவசியமுமில்லை, கட்சி முத்திரை குத்தப்படுவோம் என்று பயப்படத் தேவையுமில்லை.

தமிழராக, சமூக உணர்வுடன் இருந்தாலே போதுமானது. போருக்குப் பின்னான இன்றைய சூழ்நிலையில், ஒன்றிணைந்த தொடர் போராட்டங்களினால் மாத்திரமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும். சுழற்சி முறையில் மக்களின் பங்களிப்புடன் தொடர்ந்து போராடினால் எதுவும் சாத்தியமே.



அசோக்

# அனுரகுமார செல்லும் பாதை சரியானதா?



**அனுரகுமார** திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத்திட்டம் 17-02-2025 திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பான விவாதங்கள் நடைபெற்று வருகிறது. இந்த வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் பல்வேறு பேசுபொருள்கள் அரசியல் பரப்பில் பேசப்பட்டு வருகிறது.

'இது மக்களுக்கான ஒரு பட்ஜெட்' என்றும், 'எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை இலக்கு வைத்த பட்ஜெட்' என்றும், 'முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பட்ஜெட்டுக்கும் இந்த பட்ஜெட்டுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை' என்றும் பல்வேறுபட்ட கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த வரவு - செலவு திட்டத்தில் தமிழ் மக்களுக்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பிலும் அங்கு வாழ்கின்ற மக்கள் தொடர்பிலும் புதிய ஆட்சியாளர்கள் எத்தகைய கவனத்தை அல்லது புரிதலை கொண்டிருக்கிறார்கள் என்பதை அலசுவதே இந்த பத்தியின் நோக்கமாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பது ஏனைய மாகாணங்களுடனோ அல்லது இலங்கையில் வாழ்கின்ற ஏனைய சமூகத்தினருடனோ ஒப்பிட்டு நோக்க முடியாத வரலாற்றை கொண்டது. காரணம், இந்த மாகாணங்கள்



நீண்டகால ஆயுத போராட்டத்தை எதிர்கொண்ட மாகாணங்களாகும். அதேபோல், இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான 76 வருடங்களாக இந்த மாகாணங்களில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்கள் பல இழப்புகளை, அநீதிகளை சந்தித்திருக்கிறார்கள். அந்த இழப்புகளின் வலிகளை, வடுக்களை இன்றும் சுமந்துகொண்டு வாழும் ஒரு இனமாக தமிழர்கள் இருக்கிறார்கள்.

ஆகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அல்லது அங்கு வாழ்கின்ற மக்களுக்கு இலங்கையின் ஆட்சியாளர்களோ அல்லது சர்வதேச சமூகமோ வழங்கும் உதவிகளாக இருக்கட்டும் அல்லது தீர்வாக இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் அந்த மக்கள் அனுபவித்த துன்பங்களையும் அவர்கள் மத்தியில் யுத்த வடுக்களை சுமந்து கொண்டு வாழும் மக்களையும் கவனத்தில் கொண்டு அதற்கேற்பவே முன்னெடுக்கப்பட வேண்டும்.

> **அனுரகுமார திஸாநாயக்க வாய் வழியாக ஆசைப்படும் இலக்கை அடைய வேண்டுமாக விருந்தால் தமிழ் மக்களுடைய மனங்களை வெல்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது காலத்தின் தேவை-யாகும் என்பதை விட கடந்தகால வரலாறுகள் அவர் முன் சிறந்த பாடங்களாக இருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்தமாக இங்கு கூறி நிற்கிறோம்**

அதை விடுத்து தன்னிச்சையாக, எழுந்தமானமாக ஏனைய மாகாணங்களைப் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களையும், ஏனைய சமூகங்களை போன்று வடக்கு, கிழக்கு மக்களையும் கருதி ஒரு திட்டமோ அல்லது உதவிகளோ செல்லுமாக இருந்தால் அது விழலுக்கு இறைத்த நீராகவே போகும்.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 16 வருடங்களாக ஆட்சியில் அமர்ந்த மகிந்த ராஜபக்சவாக இருக்கட்டும் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அதன் பின்னர் வந்த கோத்தாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அனைவருமே வடக்கு, கிழக்கு மக்களுடைய வலிகளையோ அல்லது அவர்களுடைய எதிர்பார்ப்புகளையோ பூர்த்தி செய்து அவர்களின் வலிமிகுந்த மனங்களுக்கு ஆறுதல் அளிக்கும் எந்த விடயத்தையும் செய்திருக்கவில்லை.

புதிய ஆட்சியாளர்களும் (தமிழ் மக்கள் விடயத்தில்) அந்த பாதையில் செல்ல முயற்சிப்பதாகவே அவர்களுடைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் கன்னி வரவு செலவு திட்டத்தில், வடக்கு மாகாணத்துக்கு என்று பார்க்கும் பொழுது வட்டுவாகல் பால புனரமைப்புக்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கும் அதேவேளை,





யாழ்.நூலகத்துக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், மீள் குடியேற்றத்துக்கு என 1500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இங்கு வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி அல்லது வேலைத்திட்டம் என்பது ஒரு நாட்டின் அரசாங்கம் என்ற அடிப்படையில் முழு நாட்டுக்கும் ஒதுக்கப்படும் அல்லது அந்த அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் ஒரு பகுதியாகவே பார்க்க முடியும்.

ஆனால், விஷேட தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் வலிகளையும் சுமந்துகொண்டு வாழும் அந்த மக்களுக்கு புதிய அரசாங்கம் எதனை வரவு, செலவு திட்டத்தில் செய்திருக்கிறது என்று பார்த்தால் முன்னைய ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதாகவே அமைந்திருக்கிறது.

இங்கு அபிவிருத்திக்கான நிதி மாத்திரமே ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வடக்கு கிழக்கில் யுத்தத்தின் வடுக்களாக இன்றும் இன்னல்களை எதிர்கொண்டு வாழும் மக்களுக்கு இந்த அரசும் எந்த அக்கறையையும் செலுத்தவில்லை என்பது பெரும் ஏமாற்றமாக இருந்தாலும் தமிழர்களுக்கு இது பழகிப்போன ஒரு விடயமே.

வடக்கு-கிழக்கில் அபிவிருத்திக்கு அப்பால் பல அடிப்படை விடயங்கள் அவசியமானதாகவும் அத்தியாவசியமானதாகவும் இருக்கிறது. இறுதிக்கட்ட யுத்தம் நடந்த வன்னிப்பகுதியில் பல ஆயிரம் பேர் இன்றும் குடிசைகளிலும் கொட்டில்களிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

> **யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 16 வருடங்களாக ஆட்சியில் அமர்ந்த மகிந்த ராஜபக்சவாக இருக்கட்டும் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரம சிங்கவாக இருக்கட்டும் அதன் பின்னர் வந்த கோத்தாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அனைவருமே வடக்கு, கிழக்கு மக்களுடைய வலிகளையோ அல்லது அவர்களுடைய எதிர்பார்ப்புகளையோ பூர்த்தி செய்து அவர்களின் வலிமிகுந்த மனங்களுக்கு ஆறுதல் அளிக்கும் எந்த விடயத்தையும் செய்திருக்கவில்லை.**

வேலைவாய்ப்புகள் இல்லாததால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதேபோல், முன்னாள் போராளிகள் மற்றும் போரில் அவயவங்களை இழந்த பலர் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். பெண்களை தலைமைத்துவமாக கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றும் வடக்கு-கிழக்கில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் காலம் கடத்தப்பட்டு கொண்டிருந்தாலும், அல்லது விருப்பமில்லாவிட்டாலும் மேற்படி விடயங்கள் தொடர்பில் மாற்றத்தை விரும்பும் அரசாங்கம் என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி கவனம் செலுத்துவது அவசியமாகும்.

'இந்த நாட்டில் இன முரண்பாடுகள் இனி இல்லை. மதம், இனம், பாலினம் என பிரிவடையும் காரணிகள் இல்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம், ஒருவருக்கொருவர் மரியாதையுடன் இருப்போம்' என்று அனுரகுமார திஸாநாயக்க வரவு, செலவு திட்ட உரையின் இறுதியில் அறைகூவல் விடுத்திருந்தார்.

அவருடைய இந்த வாய்ப்பேச்சு இந்த நாட்டில் நடைமுறைக்கு வரவேண்டுமானால் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்களுடைய அத்தியாவசிய பிரச்சினைகளாக நாம் மேலே சுட்டிக்காட்டிய விடயங்களிலாவது, ஆக குறைந்தளவிலேனும் அரசாங்கம் மனமுவந்து செய்ய முன்வர வேண்டும்.

அவ்வாறான ஒரு சமிக்ஞையை கூட செய்ய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வராவிட்டால் இந்த அரசாங்கமும் ஒரு தோல்வியடைந்த அரசாங்கமாகவே வரலாற்று ஏட்டில் பதியப்படும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

ஆகவே அனுரகுமார திஸாநாயக்க வாய் வழியாக ஆசைப்படும் இலக்கை அடையவேண்டுமாகவிருந்தால் தமிழ் மக்களுடைய மனங்களை வெல்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது காலத்தின் தேவையாகும் என்பதை விட கடந்தகால வரலாறுகள் அவர் முன் சிறந்த பாடங்களாக இருக்கின்றன என்பதை அழுத்தம் திருத்தமாக இங்கு கூறி நிற்கிறோம்.

# இலங்கை அரசியல் வரலாற்றில்



வீரகத்தி தனபாலசிங்கம்

# மஹிந்தவின் இடம்

**இலங்கையின்** காலஞ் சென்ற முன்னாள் பிரதமர்கள் அல்லது ஜனாதிபதிகளில் எவரினதும் உடல் பேணிப் பாதுகாக்கப்பட்டு நினைவாலயத்தில் வைக்கப்படவில்லை. அவர்கள் இறந்தபோது உடல்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் நாம் அறியவில்லை.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறைந்த பிறகு அவரது உடலை பேணிப் பாதுகாத்து மக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ கடந்த வாரம் விடுத்திருக்கிறார்.

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்தவின் மரபை எதிர்காலச் சந்ததிகள் கௌரவிப்பதற்காக அவரது உடலைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும் அத்தகைய ஒரு மதிப்புமிகு அங்கீகாரத்துக்கு அவர் உரித்துடையவர் என்றும் செய்தியாளர்கள் மகாநாட்டில் அஜித் ராஜபக்ஷ கூறினார்.

முன்னாள் சோவியத் தலைவர் விளாடிமிர் லெனின் மற்றும் வியட்நாமின் புரட்சிகர தலைவர் ஹோ சி மின் ஆகியோர் அவர்களின் நாடுகளின் வரலாற்று நாயகர்கள் என்பதால் உடல்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்த நாடுகள் அவற்றின் தலைவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்திருக்கின்றன. அதே போன்ற மரியாதையை இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொடுக்க





வேண்டும். ஒரு மகத்தான தலைவர் என்ற வகையில் அவரின் முதன்மை நிலையை மலினப்படுத்தும் முயற்சிகளில் தற்போதைய அரசாங்கம் ஈடுபடுகின்றது. முன்னாள் ஜனாதிபதி தேசத்துக்கு வழங்கிய பங்களிப்புக்காக அவருக்குரிய பாதுகாப்பையும் மதிப்பையும் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

வெளியான செய்திகளின்படி முன்னாள் பிரதி சபாநாயகர் லெனினையும் ஹோசிமினையும் மாத்திரமே உதாரணமாக குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், வேறு சில நாடுகளின் தலைவர்களின் உடல்களும் அவர்களின் மரணத்துக்குப் பிறகு நினைவாலயங்களில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

1924 ஆம் ஆண்டு மரணமடைந்த லெனினின் உடல் பேணிப் பாதுகாக்கப்பட்டு மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்க நினைவாலயத்தில் 1930 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யர்கள் மகத்தான தேசபக்தப் போர் என்று வர்ணித்த இரண்டாவது உலகப்போரின்போது மாஸ்கோவை ஜேர்மன் படைகள் கைப்பற்றக்கூடும் என்று தோன்றிய போது 1941 ஆம் ஆண்டில் லெனினின் உடல் நினைவாலயத்தில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்புக்காக சைபீரியாவுக்குக்

> மஹிந்தவின் விசுவாசிகள் போர் வெற்றிக்காக அவர் வரலாற்றில் நினைவு கூரப்பட வேண்டியவர் என்று கொண்டாடலாம். மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கு சந்தர்ப்பங்களுக்காக காத்திருக்கும் தேசியவாத சக்திகளின் நம்பிக்கைக் குரியவராக அவர் விளங்கக்கூடும். ஆனால், அவர் தவறான ஆட்சிமுறையின் ஒரு சின்னமாகவே நினைவு கூரப்படுவார் என்பதே உண்மை.

கொண்டு செல்லப்பட்டது. போரின் முடிவுக்குப் பிறகு அவரது உடல் மீண்டும் மாஸ்கோவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சோவியத் யூனியனின் இரண்டாவது தலைவர் ஜோசப் ஸ்டாலின் 1953 ஆம் ஆண்டில் மரணமடைந்த பிறகு பதப்படுத்தப்பட்ட அவரது உடலும் மாஸ்கோ நினைவாலயத்தில் லெனினின் உடலுக்கு அருகாக வைக்கப்பட்டது. அவரின் மறைவுக்குப் பிறகு பதவிக்கு வந்த நிகிட்டா குருஷேவ் ஸ்டாலினின் கொள்கைகளை நிராகரித்து முன்னெடுத்த இயக்கத்தின் போது 1961 ஆம் ஆண்டில் அவரின் உடல் நினைவாலயத்தில் இருந்து அகற்றப்பட்டு செஞ்சதுக்கத்தில் கிரெம்ளினுக்கு அருகாக இருந்த மயானத்தில் புதைக்கப்பட்டது. 1976 செப்டெம்பரில் மரணமடைந்த சீனத்தலைவர் மாவோ சேதுங்கின் உடல் பெய்ஜிங்கின் தியனென்மென் சதுக்கத்தின் மத்தியில் அமைந்திருக்கும் நினைவு மண்டபத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. தனது உடலை தகனம் செய்யவேண்டும் என்று மாவோ விரும்பிய போதிலும், அவரது விருப்பம் அலட்சியம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சோவியத் யூனியனில் ஸ்டாலினின் சடலத்தை நினைவாலயத்தில் இருந்து அகற்றி புதைத்ததன் மூலமாக அவரையும் கொள்கைகளையும் குருஷேவ் ஆட்சி நிராகரித்ததைப் போன்று தனக்கும் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக மாவோ தனது உடலை தகனம் செய்யவேண்டும் என்று கேட்டிருக்கக் கூடும். ஆனால், இன்றைய சீனாவில் மாவோவின் கொள்கைகள் பின்பற்றப் படுவதில்லை என்றாலும்,



> போர் வெற்றியைப் பயன்படுத்தி பெரும்பான்மையினவாத அணிதிரட்டலைச் செய்து தங்களது அதிகாரத்தை பல வருடங்களாக வலுப்படுத்திய ராஜபக்ஷர்கள் மீண்டும் அதே தந்திரோபாயத்தின் மூலமாக அரசியலில் மீட்சி பெறலாம் என்று இன்னமும் கூட நம்புகிறார்கள் போன்று தெரிகிறது. இனவாதத்தை தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

அவரது உடல் தொடர்ந்தும் நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1969 ஆம் ஆண்டில் மரணமடைந்த வியட்நாமின் புரட்சிகர தலைவர் ஹோசி மின்னின் உடல் 1975 ஆம் ஆண்டு முதல் தலைநகர் ஹனோயில் உள்ள நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்றே 1994 ஆம் ஆண்டில் காலமான வடகொரியாவின் தாபகத் தலைவர் கிம் இல் சுங்கின் உடலும் அவருக்குப் பிறகு அதிகாரத்துக்கு வந்த அவரது மகன் கிம் ஜொங் இல்லின் உடலும் தலைநகர் யொங்யாங்கில் நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தலைவர்களின் கொள்கைகள் மற்றும் ஆட்சிமுறை பற்றி பல்வேறு விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும், அவர்கள் சகலருமே கம்யூனிஸ்டுகள். பெரும் தியாகங்களுக்கு மத்தியில் தங்களது நாடுகளில் வெற்றிகரமான கம்யூனிஸ்ட் புரட்சிகளுக்கு தலைமை தாங்கி வழிநடத்தியவர்கள்.

அவர்களை உதாரணம் காட்டி இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அத்தகைய கௌரவம் அளிக்கப்படவேண்டும் என்பது முன்னாள் பிரதி சபாநாயகரின் பெருவிருப்பமாக இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மீதான விசுவாச மிகுதியில் அந்த தலைவர்களின் 'விக்கிரக' வரிசையில் தனது தலைவரையும் வைத்துப் பார்க்க அவர் விரும்புகிறார் போலும்.

முன்னாள் ஜனாதிபதிகள் அனுபவிக்கும் சிறப்புச் சலுகைகளையும் வசதிகளையும் குறைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி எடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய கொழும்பு வாசஸ்தலம் மற்றும் பாதுகாப்புக் குறைப்பு தொடர்பில் மூண்டிருக்கும் சர்ச்சையே அஜித் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கான உடனடிக் காரணம் என்று தெரிகிறது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு விசுவாசமான அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒரே காரணத்துக்காகவே அவரையும் அவரது ஆட்சியையும் புகழ்ந்து பேசக்கூடியதாக இருக்கிறது. அந்தப் போர் எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறை கிடையாது. மஹிந்தவும் கூட தனது கட்சியின் அரசியல் மீட்சிக்கு போர்வெற்றி மீண்டும் கைகொடுக்கும் என்று நம்புகிறார். அவரது மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவும் கூட ஜனாதிபதி தேர்தலில் போருக்கு அரசியல் தலைமைத்துவம் வழக்கிய தந்தையாரின் சாதனையையே மக்கள் மத்தியில் கூறி வாக்குக் கேட்டார்.

போர் வெற்றியைப் பயன்படுத்தி பெரும்பான்மையினவாத அணிதிரட்டலைச் செய்து தங்களது அதிகாரத்தை பல வருடங்களாக வலுப்படுத்திய ராஜபக்ஷர்கள் மீண்டும் அதே தந்திரோபாயத்தின் மூலமாக அரசியலில் மீட்சி பெறலாம் என்று இன்னமும் கூட நம்புகிறார்கள் போன்று தெரிகிறது. இனவாதத்தை தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

போர் வெற்றி காரணமாக குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவும் பொதுவில் அவரது குடும்பத்தவர்களும் சிங்கள மக்கள் மத்தியில் அமோக ஆதரவைக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. ஆனால், போர் வெற்றியைப் பயன்படுத்தி சிங்கள மக்களின் கவனத்தை திசைதிருப்பி முன்னென்றும் இல்லாத வகையிலான ஊழல் ஆட்சியை நடத்திய அவர்கள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள். ஆட்சிமுறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் உருவகப்படுத்துபவர்களாக ராஜபக்ஷர்கள் விளங்குகிறார்கள்.

இலங்கை அரசியல் கடந்த காலத்திலும் சில உயர் வர்க்க குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது குடும்பம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் அருவருக்கத்தக்க முறையில் மட்டுமீறிய ஆதிக்கத்தைச் செலுத்தியதைப் போன்று அந்தக் குடும்பங்கள் செய்ததில்லை.



ராஜபக்ஷர்களுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தது போன்று அந்தக் குடும்பங்களுக்கு எதிராக ஒருபோதும் கிளர்ச்சிகள் மூண்டதில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப் படுத்தப்பட்ட பிறகு கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரச நிருவாகத்தில் எதேச்சாதிகாரம் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் மாத்திரமே அந்த எதேச்சாதிகாரம் உச்சநிலைக்குப் போனது. மட்டுமீறிய அதிகாரங்களை தங்களிடம் குவித்து வைத்திருப்பது ஏதோ தங்களது பிறப்புரிமை என்ற நினைப்பில் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

தங்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் ராஜபக்ஷர்கள் உள்நாட்டு, வெளிநாட்டுச் சதி என்று கூறுவது வழக்கம். நாட்டு மக்கள் தங்களுக்கு கடமைப்பட்டவர்கள் என்ற விசித்திரமான உணர்வை அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். விடுதலைப் புலிகளை தோற்கடித்து போரை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்காக சிங்கள மக்கள் என்றென்றைக்கும் தங்களை ஆதரிப்பார்கள் என்ற எண்ணமும் ராஜபக்ஷர்களிடம் இருந்தது. தங்களது தவறுகளை சிங்கள மக்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முன்னென்றும் இல்லாத படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ஷ சகோதரர்களும் அவர்களின் கீழ் பணியாற்றிய உயரதிகாரிகளுமே பொறுப்பு என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

முன்னாள் பிரதி சபாநாயகரைப் போன்ற அரசியல்வாதிகள் மீண்டும் அரசியலில் தலையெடுக்க வேண்டுமானால், மக்கள் மத்தியில் ராஜபக்ஷர்களின் செல்வாக்கு அதிகரிக்க வேண்டியது அவசியமாக இருக்கலாம். மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையிலும் கூட தனது மூத்த மகனின் எதிர்கால அரசியல் வாய்ப்புக்களை தனது காலத்தில் உறுதி செய்யவேண்டிய அவசரம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நாட்டு மக்களின் பிரச்சினை அதுவல்ல.

மஹிந்த ராஜபக்ஷ உரிமை கோருகின்ற போர் வெற்றியை அடுத்து தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான ஒரு அரிய வாய்ப்பை வரலாறு அவருக்குக் கொடுத்தது. போர் முடிவுக்கு வந்த உடனடியாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு பெரும்பான்மையின மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவருக்கு சகல வாய்ப்புக்களும் இருந்தன.

குறைந்தபட்சம் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையாவது சாத்தியமான அளவுக்கு நடைமுறைப்படுத்த மஹிந்த ராஜபக்ஷ முன்வந்திருந்தால் எதிர்ப்பு கிளம்பியிருக்காது. ஆனால், அவர் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக மேலும் பகைமையை வளர்க்கக்கூடிய அணுகுமுறையையே கடைப்பிடித்தார். பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இனவாதத்தை வளர்ப்பதற்கு புதிய எதிரிகளை அவர் கண்டுபிடித்தார்.

எதிர்காலச் சந்ததிகளுக்கு இனப் பிரச்சினையை விட்டுச் செல்லாமல் இருப்பதற்கு தனக்கு இருந்த வாய்ப்புக்களை மஹிந்த ராஜபக்ஷ தீர்க்கதரிசனத்துடன் உகந்த முறையில் பயன்படுத்தியிருந்தால் உண்மையிலேயே அந்த சந்ததிகளின் கௌரவத்துக்கு உரியவராக அவரைக் கொண்டாட முடியும். போர் வெற்றிக்காக மாத்திரம் அவரை எதிர்காலச் சந்ததிகள் கௌரவிக்க வேண்டும் என்று கூறுவது அடிப்படையில் இனவாதத்தை மேலும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட கோரிக்கையேயாகும்.

அரசியலில் இருந்து தற்போதைக்கு விலகப் போவதில்லை என்றும் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் கூறிக்கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தனது மரணத்துக்குப் பிறகு உடலை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று அஜித் ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை எவ்வாறு நோக்குகிறாரோ தெரியவில்லை.

மஹிந்தவின் விசுவாசிகள் போர் வெற்றிக்காக அவர் வரலாற்றில் நினைவு கூரப்படவேண்டியவர் என்று கொண்டாடலாம். மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கு சந்தர்ப்பங்களுக்காக காத்திருக்கும் தேசியவாத சக்திகளின் நம்பிக்கைக்குரியவராக அவர் விளங்கக்கூடும். ஆனால், அவர் தவறான ஆட்சிமுறையின் ஒரு சின்னமாகவே நினைவு கூரப்படுவார் என்பதே உண்மை.

# தாய்மை



புகழ்

*அங்கம் நோகும்*
*என்றறிந்தும்*
*அகம் மகிழ்பவரை*
*அறிந்ததுண்டா?*
*அங்கம் நொந்திடுனும்*
*உயிர் வலி கொண்டிடினும்*
*மகவு ஈனும் வலியை*
*மகிழ்வோடு ஏற்பவள் தாய்!*

*பிரம்மன்*
*அறிந்திருப்பான் போலும்*
*நம்மால் படைக்க முடியும்,*
*காக்க முடியாதென.*
*எனவே.. அதனை*
*தாய்க்கு தந்து விட்டான்!*

*அவ்வுயிர் தன்னுள்*
*சனித்த நாள்*
*முதலே தன்னுயிருக்காய்*
*இன்றி தான் கொண்ட*
*உயிருக்காய் வாழ்ந்திருப்பாள்...!!*

*அது எட்டி உதைப்பதையும்...*
*மனதில் எண்ணி*
*மகிழ்ந்திருப்பாள்...!*

*அடுத்த உதை எப்போதென்ற*
*ஏக்கத்துடன்*
*காத்திருப்பாள்...!*

*காணாத முகத்தோடு*
*கற்பனையில்*
*பேசிடுவாள்...!*
*வயிற்றினில் இருக்கும்*
*குழந்தையின்*
*தலை கோதி*
*மகிழ்ந்திருப்பாள்...!*

*உயிர் வலியின்*
*உயரமாய்*
*பிரசவ வலி எப்பொழுதென*
*ஏங்கி காத்திருப்பாள்...!*

*தன் மகவு*
*பூமியை தொட்டிட்ட*
*நாள் மட்டுமே அதன்*
*அழுகையை ரசித்திருப்பாள்...!*

*மற்ற பொழுதெல்லாம்*
*அதன் மகிழ்வொன்றையே*
*தன் குறிக்கோள் என*
*மனம் கொள்வாள்...!*

*ஆம்! தாய்மை*
*என்பது ஒரு தவம்!*
*அந்த இறைவனுக்கே*
*கிட்டிடாத*
*பெரும் வரம்!!*



பேராசிரியர் ஜயதேவ

# அனுரவின் யாழ் விஜயத்தின் அரசியல் செய்தி

**ஜனாதிபதி** அனுரகுமார திசாநாயக்க இரண்டு மூன்று நாட்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல மக்கள் சந்திப்புகளில் கலந்து கொண்டமை தொடர்பான காணொளிக் காட்சிகள், செய்திக் காட்சிகள் மற்றும் ஊடக அறிக்கைகளைப் பார்த்த பின்னர், அது குறித்த விமர்சனங்களும் எதிர்வினைகளும் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன. சிலவற்றில் அரசியல் பொறாமையும் வெளிப்பட்டது.

இவை நடந்த பின்னரும், ஜனாதிபதி அனுராதபுரம் வழியாக கொழும்புக்கு வந்த பின்னரும், யாழ்ப்பாணத்தின் முக்கிய அரசியல்வாதி ஒருவரை கொழும்பில் சந்திக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. சில ஊடகங்களில் இருந்த எதிர்மறையான அறிக்கைகளை மனதில் வைத்துக்கொண்டு, ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணம் குறித்து அந்த அரசியல்வாதியின் அவதானிப்பு என்னவென்று கேட்டேன்.

அந்த அரசியல்வாதியின் பதிலில் இருந்த மூன்று வாக்கியங்கள் பின்வருமாறு: “AKDக்கு முன்னர் இருந்த அலை இப்போது வேகமாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது’ என்பது முதலாவது. ‘சாதாரண மக்கள் பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், முதியோர் அனைவரிடமும் அனுரவுக்கு நல்ல ஈர்ப்பு இருக்கிறது’ என்பது இரண்டாவது.



மூன்றாவது, ‘சாதாரண மக்கள் இந்த ஜனாதிபதியை நெருங்க முடியும், கை குலுக்க முடியும் என்று நினைக்கிறார்கள். தங்களுடைய ஒருவரைச் சந்திப்பது போல அவர்கள் நினைப்பதாகத் தெரிகிறது’ என்பதாகும்.

ஜனாதிபதியின் வடக்குப் பயணத்துக்கு தெற்கிலிருந்து வெளிப்பட்ட கேலி மற்றும் எதிர்ப்பு விமர்சனங்களுக்கு அடிப்படையான அரசியல் அச்சத்தைப் புரிந்து கொள்வதன்



மூலமும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரோ நண்பரோ அல்லாத அந்த அரசியல்வாதி கூறியதிலிருந்தும் ஏதோ ஒரு ஒளி தெரிகிறது.

ஜனாதிபதி அனுர வடக்கில் மக்கள் சந்திப்புகளில் ஆற்றிய உரைகளில், வடக்கின் தமிழ் மக்களுக்கு வழங்கிய முக்கிய செய்தியைப் புரிந்துகொள்ள தெற்கின் விமர்சகர்களும் முயற்சிக்க வேண்டும் என அந்த உரைகளின் பகுதிகளைக் கேட்டபோது எனக்குத் தெரிந்தது. அது புதிய செய்தி அல்ல.

> ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களின் போது, வடக்கு மக்களுக்கு இந்த வெளியில் உருவான புதிய அரசியல் பார்வையை முன்வைத்தார். இந்த முன்வைப்பில் அவர் 'தேசிய பிரச்சினை' பற்றிய வழக்கமான இடதுசாரி அல்லது தாராளவாத அரசியல் மொழியையும் பயன்படுத்தவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களிலும் அந்த விடயம் வெளிப்படுத்தப் பட்டிருந்தாலும், அதற்கு தெற்கின் அரசியல்வாதிகளின் அல்லது அரசியல் விமர்சகர்களின் கவனம் போதுமான அளவு இன்னும் கிடைக்கவில்லை. எனினும், அது மறக்கக்கூடாத, கவனத்தில் எடுக்க வேண்டிய செய்தி என்பது எனது கருத்து.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஒருமுறை முன் வைத்தது இலங்கையின் 'தேசியப் பிரச்சினை' என்று பாரம்பரியமாக விழிக்கப்பட்ட அரசியல் பிரச்சினைக்கு இனம் சாராத மாற்று தீர்வுக்கான தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள பார்வையாகும்.

அந்தப் பார்வையை முன்வைத்து தேசியப் பிரச்சினை குறித்த பாரம்பரிய அணுகுமுறையின் முக்கிய குறைபாடாக அவர் வலியுறுத்தியது, அந்த அணுகுமுறை இலங்கை மக்களை இன அடையாளத்தின் அடிப்படையில் பிரித்து வேறுபடுத்துவதற்கு அடித்தளமாக அமைந்துள்ளது என்ற விடயமாகும்.

'தேசிய ஒற்றுமைக்கு' இன அடையாள அரசியலைக் கடந்த 'பொது உடன்பாடு'தேசிய மக்கள் சக்தியிடமிருந்து முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் முன்மொழிந்தார். தான் முன்மொழியும் இந்த 'பொது உடன்பாடு' என்ன என்பதை தெளிவாக வெளிப்படுத்தாதது தேசிய மக்கள் சக்தியின் புதிய அணுகுமுறையில் உள்ள குறைபாடாகும்.

அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், ஜனாதிபதி மிகவும் ஆர்வத்துடன் முன் வைக்கும் 'தேசிய ஒற்றுமை' குறித்த 'புதிய நோக்கின்' அரசியல் ஈர்ப்பு வரையறுக்கப் படுவதற்கு வாய்ப்புள்ளது.

### பொது உடன்பாடு

ஜனாதிபதி இந்த முறை வடக்கில் ஆற்றிய உரைகளில் அந்த 'பொது உடன்பாடு' பற்றி மறைமுகமாக பல குறிப்புகள் முன் வைக்கப்பட்டதை அவதானிக்க முடிகிறது. எனவே, செய்ய வேண்டியது, மறைமுகமாக குறிப்பிட்ட அந்தக் குறிப்புகளை முறையாகவும் வலுவாகவும் தெளிவுபடுத்துவதாகும்.

அவரது உரைகளில் இருந்து அடையாளம் காணக்கூடிய அத்தகைய இரண்டு குறிப்புகள் உள்ளன. முதலாவது, வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்களுக்கு அநீதிக்கும் அநியாயத்திற்கும் எதிராக போராடிய பொதுவான வரலாறு உள்ளது என்பதாகும். எனினும், கடந்த காலத்தைப் போல அந்தப் போராட்டங்களை தனித்தனியாக நடத்தாமல், புதிய பொதுவான தலைமையின் கீழ் ஒன்றிணைந்து முன்னெடுப்பதற்கான புதிய வரலாற்று வாய்ப்பு திறந்துள்ளது என்பது இரண்டாவதாகும்.

கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இருந்து இந்த வாய்ப்பு உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக ஜனாதிபதியின் உரைகளில் வலியுறுத்தப்பட்டது. 'பிரபுத்துவமற்ற' மக்கள் என அழைக்கப்படும் சாதாரண பொதுமக்கள் பிரபுத்துவ ஆதிக்கத்திற்கு எதிரான பொதுவான போராட்டத்தின் சம பங்காளிகளாக உள்ளனர் என்பதே ஜனாதிபதி வலியுறுத்திய வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கை இணைக்கும் 'பொது உடன்பாடு' ஆகும்.

'ஒடுக்கப்பட்ட வர்க்கம்', 'துன்பப்படும் மக்கள்' போன்ற பாரம்பரிய இடதுசாரி அரசியல் மொழியின் சொற்களைப் பயன்படுத்தாமல், ஜனாதிபதி திசாநாயக்க முன்வைத்திருப்பது அதே இடதுசாரி கருத்தை மிகவும் சமகால மற்றும் முழுமையான மொழியில் முன்வைக்க முடியும் என்ற கருத்தாகும். 'நாம்' என்ற சொல்லை இலங்கையின் அனைத்து மக்கள் பிரிவினரையும் குறிப்பிடும்போது ஜனாதிபதி பயன்படுத்துகிறார், அதன் பொருள் 'பொதுமக்கள்' என்பதாகும்.

'பொதுமக்கள்' என்பது 'பிரபுத்துவமற்ற மக்கள்', 'ஆளப்படும் மக்கள்', 'ஒடுக்கப் படும் மக்கள்', 'அதிகாரமற்ற குடிமக்கள்'



போன்ற சொற்களால் குறிப்பிடப்படும் 'சாதாரண மக்கள்' ஆவர். கொழும்பு பிரபுத்துவ வர்க்க அரசியல்வாதி யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்களை அணுகும்போது ஏற்படும் எதிர்வினையை விட அதிக ஈர்ப்பும் பிணைப்பும், பிரபுத்துவமற்ற சாதாரண மக்களின் பிரதிநிதியான ஜனாதிபதிக்கு தமிழ் சமூகத்தின் 'பொது மக்களிடமிருந்து' கிடைப்பதில் அரசியல் முக்கியத்துவம் உள்ளது.

எனவே, இன அடையாள அரசியலின் எல்லைகளைக் கடந்து செல்வதற்கான சாத்தியம் மற்றும் வரலாற்று தருணத்தை சாதகமாகப் பயன்படுத்துவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரலாற்றுப் பொறுப்பாகவும் அமைகிறது.

இலங்கையின் அனைத்து 'ஒடுக்கப்பட்ட', 'உழைக்கும்', 'ஏழை வர்க்க' மக்களை ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைத்து பொதுவான 'விடுதலைக்காக' அரசியல் ரீதியாக அணிதிரட்டுவது இலங்கையின் இடதுசாரி இயக்கம் 1930 களின் நடுப்பகுதியிலிருந்து எதிர்பார்த்த அரசியல் இலக்காகும்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் சிங்கள சமூகத்திலும் தமிழ் சமூகத்திலும் வளர்ந்த 'தேசிய வாதம்' என்று அழைக்கப்பட்ட இன அடையாள அரசியல் பரவும் போது, இடதுசாரி இயக்கத்தின் முன்னோக்கு தொழிலாளர் வர்க்க தலைமையின் கீழும், இடதுசாரிக் கட்சியின் தத்துவார்த்த வழிகாட்டுதலின் கீழும் நடைபெறும் 'வர்க்கப் போராட்டம் 'மூலம் அடையக்கூடிய 'வர்க்க விடுதலை' பற்றிய மாற்று யோசனையாக இருந்தது.

> **பிரபுத்துவ - பிரபுத்துவமற்ற துருவ மயமாக்கல் மற்றும் தேசியப் பிரச்சினை இலங்கையின் தேசியப் பிரச்சினை புதிய வரலாற்றுச் சூழலுக்குள் நுழைந்துள்ளது என்ற கருதுகோளை சற்று ஆராய்வது முக்கியம். இந்தச் சூழலின் சிறப்பம்சம் என்னவென்றால், தேசியப் பிரச்சினையும், இலங்கை அரசுக்கும் தமிழ் சமூகத்திற்கும் இடையிலான உறவும் போருக்குப் பிந்தைய காலகட்டத்தால் போர்த்தன்மை நீக்கப்பட்டுள்ளது என்பதாகும்.**

இந்த மாற்று யோசனை பற்றிய நம்பிக்கை இலங்கையின் இடதுசாரி அரசியல் கருத்தியல் விவாதத்திலும் இன்னும் நிலவுகிறது. எனினும், அது அரசியலின் சிறிய நீரோட்டங்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையில், தேசிய மக்கள் சக்தியின் முன்னோடியான மக்கள் விடுதலை முன்னணியும் தேசியப் பிரச்சினை குறித்து முன்வைத்த தீர்வில் இடதுசாரி பார்வை இருந்தது.

தேசிய மக்கள் சக்தியால் வெளிப்படுத்தப்படுவது, இந்த இடதுசாரி அணுகுமுறையை, சமகால வரலாற்று மற்றும் அரசியல் சூழலில் புதுப்பித்து, இடதுசாரி அரசியல் மொழியில் சிக்கிக் கொள்ளாமல் மீண்டும் முன்வைப்பதாக பொருள்கோடல் செய்யலாம்.

பிரபுத்துவ - பிரபுத்துவமற்ற துருவ மயமாக்கல் மற்றும் தேசியப் பிரச்சினை இலங்கையின் தேசியப் பிரச்சினை புதிய வரலாற்றுச் சூழலுக்குள் நுழைந்துள்ளது என்ற கருதுகோளை சற்று ஆராய்வது முக்கியம். இந்தச் சூழலின் சிறப்பம்சம் என்னவென்றால், தேசியப் பிரச்சினையும், இலங்கை அரசுக்கும் தமிழ் சமூகத்திற்கும் இடையிலான உறவும் போருக்குப் பிந்தைய காலகட்டத்தால் போர்த்தன்மை நீக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

இந்தப் போருக்குப் பிந்தைய நிலைமை இனப் பிரச்சினையை 'அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்கான' புதிய வாய்ப்பை உருவாக்கியிருந்தாலும், இந்த வாய்ப்பை சாதகமாகப் பயன்படுத்த அனைத்துத் தரப்பினரும் தோல்வியடைந்துள்ளனர். சிங்கள ஆளும் வர்க்கமும் தமிழ் சமூகத்தின் அரசியல் வர்க்கமும் இந்தத் தோல்வியின் பங்காளிகள் ஆவர். ஆயினும், கடந்த சில ஆண்டுகளில் அந்த தோல்வியின் எதிர்பாராத மற்றும் சாதகமான விளைவு ஒன்று




வெளிப்பட்டுள்ளது. அதாவது, 'தேசிய பிரச்சினை'க்கான தீர்வுகள் குறித்த அரசியல் கருத்தியல், உரையாடல் மற்றும் கலந்துரையாடலின் போதான மொழிப் பாவனை, புதிய தொடக்கத்திற்கும் வரலாற்று வெளி திறந்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களின் போது, வடக்கு மக்களுக்கு இந்த வெளியில் உருவான புதிய அரசியல் பார்வையை முன்வைத்தார். இந்த முன்வைப்பில் அவர் 'தேசிய பிரச்சினை' பற்றிய வழக்கமான இடதுசாரி அல்லது தாராளவாத அரசியல் மொழியையும் பயன்படுத்தவில்லை.

அதில் ஜே.வி.பி.யின் பழைய அரசியல் மொழியும் இல்லை. தமிழ் அரசியல் கட்சிகளின் அரசியல் சொற்களஞ்சியமும் அதில் இல்லை. தேசிய மக்கள் சக்தியின் இந்தப் பார்வைக்கு ஆரம்பத்தில் எதிர்மறை எதிர்வினைகள் கிடைத்ததும், எதிர்வினைகள் கிடைக்காததும் இதனால்தான் இருக்கலாம்.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களும், மலையக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஓரளவு இந்த 'எதிர்கால நோக்கிற்காக' ஈர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. இதற்கிடையே, ஜனாதிபதியின் 'எதிர்கால நோக்கு' மிகத் தெளிவாகவும் நேரடியாகவும் கடந்த வாரம் வடக்கு விஜயத்தின் போதும் அனுராதபுரத்திலும் ஆற்றிய உரைகளில் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் தேசிய பிரச்சினை தொடர்பான புதிய பார்வை முன்வைக்கப்பட்டுள்ள பின்னணியில், அரசியல் ரீதியாக மிகவும் அர்த்தமுள்ள மற்றொரு வளர்ச்சியையும் நாம் அடையாளம் காணலாம். அதாவது இலங்கையில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மேலும் தீவிரமடைந்த பிரபுத்துவ - சாதாரண மக்கள் என்ற சமூக அரசியல் துருவமயமாக்கலாகும். இந்தப் பிளவு அரசியல் துறையில் மிகத் தீவிரமாக வெளிப்பட்டது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த 1948ஆம் ஆண்டு முதல் நாட்டை ஆண்ட பிரபுத்துவ வர்க்கங்கள் மற்றும் குடும்பங்களில் இருந்து வந்த அரசியல் தலைமை மீதான குடிமக்களின் நம்பிக்கை சரிவடைந்த செயல்முறை, 2022 - 2024 ஆண்டுகளில் வெளிப்பட்ட மிக முக்கியமான அரசியல் போக்காக இருந்தது. இது வர்க்க வேறுபாட்டின் அரசியலையும் உள்ளடக்கிய, அதைவிட விரிவான சமூக கட்டமைப்பைக் கொண்ட பிளவாகும். பொருளாதார மற்றும் சமூக பிளவுகளும் நிச்சயமாக இதற்கு அடிப்படையாக உள்ளன. எனினும், இந்தப் பிளவுகள் அரசியல் தளத்தில் சமூகத்தில் ஏற்பட்டுள்ள இரு எதிர் முகாம்களைக் கொண்ட பிளவாக வெளிப்பட்டுள்ளன.

ஆட்சியாளர் -ஆளப்படுபவர், அதிகாரம் உள்ளவர் - அதிகாரமற்றவர், அதிகாரத்திலிருந்து அகற்றப்பட வேண்டியவர் - அதிகாரத்திற்கு வர வேண்டியவர் என்ற வகையில் இந்த துருவமயமாக்கல் பல வடிவங்களில் இலங்கை சமூகத்தில் வெளிப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி இலங்கை முழுவதும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடமிருந்து பெற்ற முன்னெப்போதும் இல்லாத அரசியல் ஆதரவும், சமீபத்தில் யாழ்ப்பாண விஜயத்தின்போது ஜனாதிபதி பெற்ற வரவேற்பும் எதிர்வினையும் குறிப்பிடுவது என்னவென்றால், சாதாரண சமூக சக்தியின் அரசியல் பிரதிநிதியாக, ஜனாதிபதியாக இருக்கும் சிங்கள அரசியல் தலைவருடன் அடையாளப்படுத்திக்கொள்ள வடக்கின் சாதாரண / பொது மக்கள் காட்டும் தயார் நிலையாகும். வடக்கின் தமிழ் மக்கள் தேசியவாதத்துக்குப் பிந்தைய அரசியலை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளனர் என்ற முடிவுக்கு வர இது போதுமான சான்றாக இல்லை.

எனினும் இலங்கையின் 'தேசிய பிரச்சினையின்' தன்மை மற்றும் இயக்கவியல் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அரசியல் தலைவர்களின் பார்வைக்கும் கவனத்திற்கும் உட்படாமல், அந்த சமூகங்களின் 'பொது மக்கள்' முன்னெடுக்கும் புதிய மாற்றத்திற்கும் காலகட்டத்திற்கும் உட்பட்டுள்ளது.

சிங்கள சமூகத்தின் பிரபுத்துவமற்ற மற்றும் பொதுமக்கள் அரசியல் தலைவர் ஒருவருக்கு இந்த மாற்றத்தையும், அது திறந்து விட்டுள்ள மாற்றத்திற்கான அரசியல் வெளியையும் புரிந்துகொள்ள முடிவது, அந்த சமூகங்களின் பிரபுத்துவ அரசியல் தலைமைகளுக்கு தங்களது அரசியல் பொருத்தப்பாடு குறித்து சுய-விமர்சன ரீதியாக சிந்திக்க ஒரு அழைப்பாகவும் அமைகிறது.





நிலாந்தன்

# கிளீன் தையிட்டி

**யாழ்ப்பாணம்** திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை விருந்தினர் விடுதியில் இலங்கைக்கான ஐநா அலுவலகம் ஒரு விருந்துபசாரத்தை ஒழுங்குபடுத்தியிருந்தது. இலங்கையில் ஐநாவின் பிரசன்னம் 70 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது. இந்த 70 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக அந்த விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஐநாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் உட்பட ஐநாவின் கட்டமைப்புகளுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளும் அந்த அலுவலகங்களில் வேலை செய்யும் உள்ளூர் அலுவலர்களும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

மேலும் கட்சித் தலைவர்கள் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், அரச அதிகாரிகள் என்று பலவகைப்பட்டவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிகழ்வில் பேசிய இலங்கைக்கான ஐநாவின் வதிவிட ஒருங்கிணைப்பாளர், சிவில் சமூகங்களை அரசியல் கட்சிகளும் அரசாங்கமும் எதிர் நிலையில் வைத்து பார்க்கக்கூடாது என்று பேசினார்.



இலங்கைத் தீவில் ஐநாவின் பிரசன்னம் 70 ஆண்டுகள். ஆனால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை 70 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. தமிழ் மக்கள் ஐநாவுடன் நெருக்கமாக வேலை செய்ய தொடங்கியது 2009 க்குப் பின்னிருந்து, அதாவது 15 ஆண்டுகள். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினையை தீர்க்கும் நோக்கத்தோடு நிலைமாறு கால நீதியை இலங்கை தீவில் ஸ்தாபிப்பதற்காக உழைத்தது கடந்த 9 ஆண்டுகள்.

இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவில் ஐநாவின் 70 ஆண்டுகால பிரசன்னத்தால் இனப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. குறிப்பாக 2009 க்குப் பின்னரான கடந்த 15 ஆண்டு காலத் தமிழ் அரசியல் எனப்படுவது அதிகபட்சம் ஐநா மைய அரசியலாகவே இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக 2015, செப்டம்பர் மாதம் இலங்கை அரசாங்கத்தின்



இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்குப் பின்னிருந்து தமிழ்க் கட்சிகளில் ஒரு பகுதியும் சிவில் சமூகங்களும் மனித உரிமைக் காவலர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நிலை மாறுகால நீதிக்காக அதாவது போரில் ஈடுபட்ட தரப்புகளை பொறுப்புக்கூற வைப்பதற்காக உழைத்து வருகின்றன. ஆனால் அவ்வாறு உழைத்ததன் விளைவாக தமிழ் மக்கள் பெற்றவை என்ன?

கடந்த 2021 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்காக சிவில் சமூகங்கள் கட்சிகளை ஒருங்கிணைத்தன. அதற்குரிய இரண்டாவது சந்திப்பு வவுனியாவில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது அதில் பங்குபற்றிய சுமந்திரன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

‘6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையைச் செய்தோம், அதில் தோல்வியடைந்து விட்டோம்.’ ஆறாண்டு காலப் பரிசோதனை என்பது என்ன? அதுதான் 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலைமாறு கால நீதிக்காக உழைத்தமை.

நிலைமாறு கால நீதியைப் பொறுத்தவரைகூட்டமைப்பு அதன் பங்காளியாகச் செயல் பட்டது. புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பில் உள்ள அமைப்புகளும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நிலை மாறு கால நீதி வேண்டாம், இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதிதான் வேண்டும் என்று கோரிய ஓர் அரசியல் சூழலில், கூட்டமைப்பு நிலைமாறு கால நீதியின் பக்கம் நின்றது.

ஆனால் அந்தப் பரிசோதனையில் தாங்கள் தோல்வியடைந்து விட்டதாக சுமந்திரன் - அவர்தான் நிலை மாறு கால நீதிச் செயற்பாடுகளில் தமிழ்த் தரப்பின் பிரதான பங்காளி - கூறினார். நிலை மாறுகால நீதிச் செயற்பாடுகள் இலங்கைத் தீவில் எதிர்மறை விளைவுகளைத்தான் தந்தன. ஆங்கிலத்தில் அதனை ‘கவுண்டர் ப்ரொடக்டிவ்’ என்று கூறுவார்கள்.

அதாவது நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகள் இலங்கைத் தீவில் தோல்வியடைந்து விட்டன. அதற்குப் பின்னரும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. ஐநாவை நோக்கிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் நிறைவேற்றப் படவில்லை.

2021 ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிகள் ஐநாவுக்கு எழுதிய கூட்டுக் கடிதத்தில் ஒரு சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையைக் கேட்டிருந்தார்கள். குறிப்பாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது அந்தப் பொறிமுறையானது குறுகிய காலத்துக்குள் சாட்சியங்களைச் சேகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஆனால் அந்தக் கடிதத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஐநாவின் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான பொறிமுறையானது மிகப் பலவீனமானதாகவே அமைந்தது. அது ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கும் ஓர் அலுவலகமாக சுருக்கப்பட்டு விட்டது. இதுதான் கடந்த 15 ஆண்டுகால ஐநா மையத் தமிழ் அரசியலின் தொகுக்கப்பட்ட விளைவு.

இப்படிப்பட்டதோர் பூகோள அரசியற் சூழலில், திண்ணையில் நடந்த விருந்துபசாரத்துக்கு முதல் நாள் மாலை அதே திண்ணையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. ஐநாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் ஐநாவின் வெவ்வேறு அலகுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளும் கலந்து கொண்ட மேற்படி சந்திப்பில், தமிழ்மக்கள் மத்தியில் உள்ள குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

சந்திப்பில் நிலைமாறு கால நீதியின் தோல்வி குறித்து ஆழமாகப் பேசப்பட்டது. அந்தச் சந்திப்பின் முடிவில் இலங்கைக்குரிய ஐநா வதிவிட ஒருங்கிணைப்பாளரான மார்க் அன்ட்ரே ஃபிரான்ச்சே எல்லாவற்றையும் தொகுத்துப் பதில் சொன்னார்.

அவர் பழக இனிமையானவர்; எளிமையானவர்; வெளிப்படையான ஒரு ராஜதந்திரி. கதைப்போக்கில் சில விடயங்களை நறுக்கென்று சொல்லிவிட்டு போகக் கூடியவர். அவர் தனது தொகுப்புரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற பின் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகப் போவதாகத் தெரிகிறது.

இலங்கைக்கு எதிரான ஐநா தீர்மானங்களில் அமெரிக்கா பிரதான உந்துசக்தியாக இருந்து வந்திருக்கிறது. இந்நிலையில் இனி வரக்கூடிய ஐநா தீர்மானங்களை இலங்கை அரசாங்கமும் ஐநாவும் இணைந்து நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறையக்கூடும்.

மேலும் இப்பொழுது நடைமுறையில் உள்ள சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் செயற்பாடுகளையும் அது பாதிக்கக்கூடும் என்ற பொருள் கொள்ளத்தக்க விதத்தில் அவரது உரை அமைந்திருந்தது.





அமெரிக்கா ஐநா மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலக நேர்ந்தாலும் சுவிட்சர்லாந்து அந்தப் பாத்திரத்தை வகிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

காசா, உக்ரைன் அழிவுகளின் பின்னணியில், பொதுவாகவே இலங்கை மீதான, அதாவது தமிழர் விவகாரத்தின் மீதான, ஐநாவின் கவனக் குவிப்பு குறையக் கூடிய வாய்ப்புகள் அதிகம். இவை மட்டுமல்ல உலகத்தின் கவனத்தையும் ஐநாவின் கவனத்தையும் ஏன் கொழும்பின் கவனத்தையும்கூட ஈர்க்கக்கூடிய விதத்தில் தமிழ் அரசியல் தொடர்ச்சியாக நொதிக்கும் ஒன்றதாக, கொந்தளிப்பானதாக இல்லை என்பதும் ஒரு காரணந்தான்.

இதை இன்னும் கூரான வார்த்தைகளில் சொன்னால், தமது அரசியலை கொந்தளிப்பானதாக உலகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்கதாக கொதிநிலையில் வைத்திருக்கத் தமிழ் மக்களால் முடியவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில், கடந்த புதன்கிழமை தையிட்டியில் நடந்த போராட்டம் ஒப்பீட்டளவில் எழுச்சிகரமானது. தையிட்டியை மையமாகக் கொண்டு இப்பொழுது தமிழ் அரசியல் நொதிக்கத் தொடங்கியுள்ளது. சிறீலங்காவை கிளீன் செய்யப் போவதாகச் செல்லும் ஓர் அரசாங்கத்தை நோக்கி 'கிளீன் தையிட்டி' என்று தமிழ்மக்கள் கேட்கிறார்கள்.

நில ஆக்கிரமிப்புக்கு எதிரான அரசியல் தொடர்ந்து நொதிக்குமா? கொழும்பின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் தன்னை நோக்கி ஈர்த்து வைத்திருக்க முடியுமா?

முடியுமா என்ற கேள்விக்கே இங்கு இடம் இல்லை. அதை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும். நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் தீர்க்கப்படாத ஏனைய பிரச்சினைகளுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் தமது அரசியலில் நொதிக்கச் செய்ய வேண்டும். உலகமும் கொழும்பும் திரும்பிப் பார்க்கத்தக்க எழுச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

தையிட்டியில் திரண்ட மக்கள் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல. அதில் முன்பு அரசாங்கத்தின் பக்கம் நின்ற கட்சிகள், நிலைமாறு கால நீதியை ஆதரித்த கட்சிகள் என்று எல்லா வகைப் பட்ட கட்சிகளும் நின்றன.

அது ஒரு திரட்சி. வரலாற்றில் எல்லாத் தேசத் திரட்சிகளும் அப்படிப்பட்டவைதான். 'நீ முன்பு அரசாங்கத்தோடு நின்றாய், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அரசாங்கம் காணியை அபகரித்த பொழுது உடந்தையாக நின்றாய், நிலைமாறு கால நீதியின் பக்கம் நின்றாய்' என்றெல்லாம் பழைய தோம்பை இழுத்துக் கொண்டிருந்தால் தேசத்தைத் திரட்ட முடியாது.

தேசத் திரட்சிக்குள் எல்லாமும் அடங்கும். அதற்குத் தலைமை தாங்கும் கட்டமைப்பு உறுதியானதாக கொள்கைப் பிடிப்புள்ளதாக இருந்தால் போதும்.

திரட்சி எல்லா கட்சிகளுக்கும் ஒரு செய்தியை மீண்டும் உணர்த்துகிறது. அது புதிய செய்தி அல்ல. கடந்த 15 ஆண்டுகளாக கற்கத் தவறிய செய்தி. முள்ளிவாய்க்காலில் இருந்து கற்றுக் கொள்ளாத செய்தி. அது ஒரு தேர்தல் தோல்வியிலிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு செய்தியல்ல.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட எல்லாப் பெரிய எழுச்சிகளும் ஒரு கட்சிக்குரியவை அல்ல. அதில் பல கட்சிகள் இருந்தன. குடிமக்கள் சமூகங்கள், மக்கள் அமைப்புக்கள் இணைந்தன. எனவே இனிமேலும் அப்படித்தான் இருக்கும். தையிட்டி விவகாரத்தைத் தொடர்ந்து கவனக் குவிப்பில் வைத்திருந்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான்.

சுமார் 20 மாதங்களுக்கு மேலாக அந்தப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்த அக் கட்சியால் முடியவில்லை. ஆனால் நடந்து முடிந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் விளைவாக அது சூடுபிடித்திருக்கிறது. விரைவில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கியும் கட்சிகள் உழைக்கின்றன என்பது உண்மை. கட்சிகள் அப்படித்தான் சிந்திக்கும்.


ஆனால் யார் எதற்காக உழைக்கிறார்கள் என்பது இங்கு பிரச்சனையில்லை. ஒரு ஆக்கிரமிப்புக்கு எதிராக தேசமாகத் திரள முடிந்தால் அது வெற்றியே. கடந்த 15 ஆண்டுகளில் நிகழ்ந்த 'எழுக தமிழ், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான எழுச்சி', ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நோக்கிக் குவிந்த வாக்குகள் எல்லாமும் பல கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் சேர்ந்து திரட்டியவைதான்.

அவை யாவும் கூட்டுச் செயற்பாடுகள் தான். எனவே தையிட்டிப் போராட்டம் தமிழ் கட்சிகளுக்கு மீண்டும் மீண்டும் உணர்த்தியிருப்பது அதனைத்தான். கட்சிகளைக் கடந்து ஒரு திரட்சியை ஏற்படுத்துவது என்றால், அதற்கு பல கட்சிகள் சம்பந்தப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட திரட்சிகள்தான் ஒப்பீட்டளவில் ஐநாவையும் உலகத்தையும் கொழும்பையும் தமிழ் மக்களை நோக்கித் திருப்பும். தமிழர்கள் தமது அரசியலை நொதிக்கச் செய்ய வேண்டும். கொதிக்கச் செய்ய வேண்டும். கொந்தளிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தேசத் திரட்சியைப் பலப்படுத்தலாம். தமிழ்த் தேசிய வாக்குகள் தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியே சிந்தப்படுவதையும் தடுக்கலாம்.



# அவள்



விடியாத இரவாக
அவள் கூந்தல்!
அதில் குடி ஏறத் துடிக்கின்ற
சில பூக்கள்!


முகில்களாய்
மிதக்கின்ற அவள் சேலை!

சிக்கித்தான் சிதறுது
பல காளை!

சூரியப் புயல் போல
சிறு பார்வை!
பட்டுவிட்டால் ஒட்டிக் கொள்ளும்
குளிர் கோடை!

வருடங்கள் கடந்ததாய்
வரும் எண்ணம்!
நினைவுகள் கிழுக்கிண்ட
இன்பமாய் துள்ளுது
என் உள்ளம்!

**ஈழவன் அனுராஜ்**



# வாசிப்பு

பவானி

**இன்றைய** நவீன உலகின் இலத்திரனியல் மயமாக்கலில் வாசிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தும் எமது சமூகத்திடம் வாசிப்பின் தன்மை குறைவாகவே காணப்படுகிறது. இவ் விஞ்ஞான யுகத்தில் இணையத் தளங்கள் உருவாகி, பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகமாக உள்ளதை சரியாக பயன்படுத்தாமல் சோம்பேறித்தன மான நிலையில் கைபேசி, கணினிகள் என்பவற்றில் உள்ள போட்டி விளையாட்டுக்களில் நேரத்தைச் செலவிட்டு அதற்கு அடிமையாகி விட்டார்கள்.

'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்' என்று கூறுவார்கள். வாசிப்பதால் எம் அறிவு வளர்வதோடு, சிந்திக்கும் ஆற்றல், கற்பனைத் திறன், பேச்சாற்றல், பல்வேறு வகையான வாழ்க்கை அனுபவங்கள் பற்றிய அறிவு, சஞ்சலமற்ற மனநிலைமை, எதனையும் கிரகிக்கும் மன ஒருமைப்பாடு, பகுத்து ஆராய்ந்து முடிவெடுக்கும் தன்மை, எல்லாவற்றிலும் மிக முக்கியமாக பொறுமை என பல நல்ல ஆளுமைகளை வெளிக்கொணர முடியும்.

அறிவு என்பது நாம் படிக்கும், கற்கும் நூல்களிலேயே வருகிறது. இதனை அழகாக நாலடியார் நூலில் ஔவையார் மிக அருமையாக கூறியுள்ளார்.

*'நீரளவே ஆகுமாம் நீராம்பல் -*
*தான் கற்ற*
*நூலளவேயாகுமாம் நுண்ணறிவு'*

எனவே வாசிப்பதால் சிந்தனைத் திறன் அதிகரிப்பதோடு, எமக்கு தேவையான விடயங்களை இலகுவாக எழுதவோ விவாதிக்கவோ முடியும். எனவே நாம் நிறைய நூல்களை வாசிக்க வேண்டும்.

நண்பர்களாக குழு நிலை விவாதங்களை ஏற்படுத்தி வாதிட வேண்டும். இத்தகைய பழக்கத்தை நாம் சிறுவர் மத்தியில் தூண்டி விட வேண்டும். சிறு சிறு போட்டிகள், பரிசுகள் வழங்குவதன் மூலமாகவும் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க முடியும்.

ஒரு தாய் அதன் கருவுற்ற காலத்தில், நற்சிந்தனைகளை மனதில் நினைத்து, நல்லறிவுப் புத்தகங்களை வாசிக்க வேண்டும். பாரதப்போரில் சக்கரவியூகம் அமைத்த அபிமன்யுவின் கதை இதற்கு சிறந்த சான்றாகும். கருவுற்ற காலங்களில் நம் எண்ணங்களே குழந்தையின் அறிவில் பதிகிறது.

எனவே இக்காலம் குழந்தையின் சிந்தனையை தூண்ட மிகவும் பொருத்தமான காலமாகும். இதனை தாய் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 'வாசிப்பு' என்பது எரிச்சல் தரும் செயலல்ல. அது எம் அறிவுக் கண்ணைத் திறந்து, எதிர்காலத்தில் வெற்றி பெறுவதற்கான திறவு கோலாகும்.'

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். இந் நற்பழக்கத்தை நாம் சிறுவயதிலேயே தூண்டுவதன் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். தமிழில் ஒரு பழமொழி உண்டு.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என.

குழந்தைகளாக இருக்கும் போதே இப் பழக்கத்தை ஏற்படுத்துவது பெற்றோரின் கடமையாகும். நவீன காலத்தில் நாம் கண் கூடாக காணும் உண்மை



எதுவெனில் குழந்தைகள் அடம் பிடிக்கும் போதோ அழும் போதோ தாம் தொல்லை இன்றி இருப்பதற்காக பெற்றோர் குழந்தைகள் கையில் கைத்தொலைபேசியை தருகிறார்கள். அதற்கு குழந்தை அடிமையாகி விடுகின்றது அதை விடுத்து நாம் மனதை கவரும் விதமாக நற்சிந்தனைக் கதைகளை கூறி குழந்தைகளின் அறிவுத் திறனை கூட்டினால் வளரும் போதே அவர்கள் தங்கள் அறிவுத்திறனை வளர்க்கும் தேடலில் வாசிப்பைத் தொடர்வார்கள் .

வாசிப்பதற்கு வயதெல்லை கிடையாது. வாசிப்பு மிதமிஞ்சிய, இரசனையும் ஏற்படுத்தும். இதனை ஆங்கிலத்தில் “READ FOR FUN READ FOR PLEASURE‘ என்பார்கள். இந் நவீன உலகில் இலத்திரனியல் ஊடகங்களின் செய்திகள், ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் போன்றவற்றை வாசிப்பின் மூலம் அத்துறை சார்ந்தவர்களின் அறிவு வளரும். அதுமட்டுமன்றி சிறந்த ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் அறிஞர்கள், சட்டவாளர்கள் என பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்க முடியும்.

எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வகம் வாசிப்புத் திறனற்றவர்கள் எழுத்தாற்றல் திறன் குறைந்தவர்கள் எனக் கூறுகிறது. கல்வித்திறன் அதிகரிக்கவும், வினைத்திறன் அதிகரிக்கவும் வாசிப்பு மிக அவசியமானது.

வாசிப்புப் பழக்கமற்றவர்களால் வினைத்திறனாக செயல்பட முடியாது. இதனால் சமுகத்தில் உளவியல் ரீதியான பாதிப்பு அதிகரிக்கும். கொடுக்கப்படும் வேலை பற்றிய தகவலைப்பெறக் கூட அதிக நேரத்தை செலவிட வேண்டி வரும்.

எனவே இந்த நவீன உலகில் புதிய புதிய விடயங்கள், புதிய கண்டுபிடிப்புகள், ஒவ்வொரு நாட்டினதும் கலை, கலாச்சாரம் பண்பு, என்பனவற்றை வாசிப்பின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’ என்பது பழமொழி. எனவே நம் சிறுவர்கள், வருங்கால சந்ததிகளை வாசிப்பில் ஊக்குவிக்க வேண்டியது எமது கட்டாயக் கடமையாகும்.

அவர்கள் அறிவுத் திறனை வளர்க்க ஊக்குவிப்பதற்கு அன்றாடம் பத்திரிகை, சஞ்சிகை, பொது அறிவுப் புத்தகங்கள் என பலவற்றை அறிமுகப்படுத்தி வாசிக்கத் தூண்ட வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். வாசிப்பதில் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தினால் போதும். வாசிக்கும் பழக்கம் தானாக சிறார்களிடம் உருவாகி விடும்.

*‘வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.’*



# ஜப்பானில் உலகின் ஆகச் சிறிய பூங்கா

## கின்னஸ் சாதனை

ஜப்பானின் ஷிசுகோ மாநிலத்தில் உள்ள நாகைசுமி நகரத்தில் உள்ள பூங்கா உலகின் ஆகச் சிறிய பூங்கா என்று கின்னஸ் உலக சாதனை அமைப்பு அங்கிகரித்துள்ளது.

பூங்காவிற்கான சான்றிதழையும் அமைப்பு பிப்ரவரி 25 வழங்கியது. அதற்காக சிறப்பு நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

பூங்காவின் அளவு 0.24 சதுர மீட்டர். அதாவது இரண்டு ஏ3 தாள்களின் மொத்த அளவு தான் இருக்கும்.

முதலில் அந்த பூங்கா ஒரு சிறு இடமாக இருந்தது. ஆனால் நகர சீரமைப்பு ஆணையம் சில மறு சீரமைப்பு வேலைகளை மேற்கொண்டதால் அந்த பூங்கா மேலும் சிறிய இடமாக மாறியது.

பின்னர் 1988ஆம் ஆண்டு அங்கு குடியிருப்பாளர்கள் அமர சிறிய பலகை வைக்கப்பட்டது. ஆனால் அது பூங்காவாக பதிவு செய்யப்படவில்லை.

சிறிய இடமாக இருந்ததால் அது உலகின் சிறிய பூங்கா என்று சமுக ஊடகங்களில் பிரபலமானது. பின்னர் அதை அந்நகரம் பூங்காவாக பதிவு செய்து இப்போது சாதனைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

இதற்கு முன்னர் உலகின் ஆக சிறிய பூங்காவாக அமெரிக்காவின் போர்ட்லாண்டில் உள்ள மில் என்ட்ஸ் பார்க் இருந்தது. அதன் அளவு 0.29 சதுர மீட்டர்.



புனித பிரியா

# நெல்லா? வைக்கோலா?

**உண்மையாகவே** நாம் சுதந்திரமாகத்தான் வாழ்கிறோமா? வேறு எதில் இருந்து விடுதலை பெற்றிருந்தாலும் வாழ்க்கைச் செலவிலிருந்து நாம் இன்னும் விடுதலை அடையவில்லை. இதன் காரணமாக பலரும் பசி, பட்டினியோடு தான் இருக்கிறோம்.

அரசியல்வாதிகளுக்கு இலங்கையில் அரிசிப் பிரச்சினை இல்லை. தேங்காய்ப் பிரச்சினையும் இல்லை. இந்த நாட்டின் மிகச்சிறந்த விவசாயியாகக் கருதப்படக்கூடிய விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, ஒரு பெரிய நெருக்கடியில் சிக்கியுள்ளார்.



அவரால் இன்னும் நெல்லுக்கு உத்தரவாத விலையைப் பெற முடியவில்லை.

அரசாங்கத்தில் யாரிடம் கேட்டாலும், அவர்கள் அனைவரும் அடுத்த சில நாட்களில் நெல் கொள்முதல் செய்வதற்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலை அறிவிக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த நாள் எப்போது வரும் என்று சொல்ல முடியாது. தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது பற்றி சிலர் கூறும் கதையைப் போலவே இதுவும் உள்ளது. தமிழ், சிங்களப் புத்தாண்டு என்று சொன்னாலும், அது எந்த வருடம் வரும் புத்தாண்டு என்றும் சொல்லவில்லை.

நெல்லுக்கான உத்தரவாத விலை பிரச்சினை காரணமாக இலங்கை விவசாயிகள் மிகவும் மோசமான சூழ்நிலைகளை எதிர்க்கொண்டுள்ளனர். அரசாங்கம் சொல்வதைக் கேட்டுக்கொண்டு ஊடக சந்திப்பு நடத்திவிட்டு தங்கள் குறைகளைப் பற்றிக் கூறி மௌனமாக இருப்பது நமது



விவசாயிகளின் வழக்கமாகி விட்டது. இப்போது, இந்த நாட்டிலுள்ள நான்கு அல்லது ஐந்து பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் நேரடியாக வயல்களுக்குச் சென்று அதிக விலைக்கு அரிசியை வாங்கத் தொடங்கியுள்ளனர். அரசாங்கம் நெல்லுக்கு உத்தரவாத விலையை அறிவிக்கும் நாள் வரும்போது, வைக்கோல் மட்டுமே மிஞ்சியிருக்கும்.

எனவே, அரசின் அனைத்து நெல் களஞ்சியசாலைகளையும் வைக்கோலால்தான் நிரப்ப வேண்டும். இந்த நாட்டில் அரசாங்கத்தை அமைப்பது மிகவும் கடினமான பணி என்பது உண்மைதான். இந்த நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்கள் ஒரே திசையில் நகர்வதற்குப் பதிலாக வெவ்வேறு திசைகளில் நகர்ந்து, நகர்ந்து தாமதப்படுத்தி, ஆமை வேகத்தில் செல்லப் பழகி விட்டனர்.

இதனால் நாட்டை நிர்வகிப்பது மிகவும் கடினமாகிறது. நாம் வாய் திறந்தாலே 2500 ஆண்டுகால வரலாற்றைப் பற்றிப் பேசப் பழகிவிட்டோம். ஆனால் ஒரு அவசரத்திற்கு யாரிடமும் கையில் 500 ரூபாய் கூட இல்லை. அப்படியானால் 2500 ஆண்டுகால கலாச்சாரத்தை பற்றி பேசுவதில் என்ன பயன்?

நாம் முதலில் செய்ய வேண்டியது அரசாங்கத்தைக் கவிழ்ப்பது அல்ல, மக்கள் குழியில் விழுவதைத் தடுக்க வேண்டும். கடந்த ஆண்டு, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கடந்த ஆண்டு ஜனவரியில் நெல்லுக்கு உத்தரவாத விலையை அறிவித்தது. அதன்படி, 14% ஈரப்பதம் கொண்ட ஒரு கிலோ நாட்டரிசி நெல்லின் விலை ரூ. 105, ரூபாவாகவும், அதே ஈரப்பதம் கொண்ட ஒரு கிலோ சம்பா அரிசி நெல் 120 ரூபாய்க்கும், ஒரு கிலோ கீரி சம்பா நெல்லை ரூ.130க்கு கொள்வனவு செய்யத் தயாராக இருப்பதாக அரசு அறிவித்திருந்தது.

14% க்கும் அதிகமான ஈரப்பதம் கொண்ட நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா நெல்லின் விலை ரூ. 90, ரூ. 100, 120 ரூபாய் விலையில் வாங்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது. அத்துடன், நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாயும், நெல் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு 25 மில்லியன் ரூபாயும் வழங்க அந்த அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

> அரசாங்கம் ஒரு பெரிய பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். இது மிகவும் கடினமான சூழ்நிலை. உலகின் பிற நாடுகளும் பொருளாதார நெருக்கடியை நோக்கிச் செல்கின்றன. எனவே, நாங்கள் முன்னர் போல தான் தோன்றித்தனமாக கடன்களைப் பெற முடியாது.

இந்தப் பணம் அனைத்தும் தனியார் மற்றும் அரசு வங்கிகளால் வழங்கப்பட்டது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, நெல்லுக்கு கிலோவுக்கு ரூ.150 உத்தரவாத விலை வழங்குவதாகக் கூறியிருந்தது. இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுவது போல், இந்த அரசாங்கத்தால் உத்தரவாத விலையை நிர்ணயிப்பதன் மூலம் விவசாயிகளின் உரத்திற்கு பணம் கூட வழங்க முடியாது.

அரசாங்கம் ஒரு பெரிய பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். இது மிகவும் கடினமான சூழ்நிலை. உலகின் பிற நாடுகளும் பொருளாதார நெருக்கடியை நோக்கிச் செல்கின்றன. எனவே, நாங்கள் முன்னர் போல தான் தோன்றித்தனமாக கடன்களைப் பெற முடியாது.

மேலும், வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களுக்கான தவணைகள் மற்றும் வட்டியை செலுத்த இயலாமல் போனதின் காரணமாக, கடந்த காலங்களில் நாடுகள் நமக்குக் கடன் வழங்க அதிக விருப்பம் கொள்ளவில்லை. சில நாடுகள் இந்த நேரத்தில் மிகப்பெரிய இலக்குகளை மனதில் நிறுத்திக்கொண்டு தான் நமக்குக் கடன் வழங்குகின்றன.

சில நேரங்களில் அந்த நாடுகள் நம் நாட்டின் ஒரு பகுதியை எடுத்து தங்களுக்கென குக்கிராமங்களை அமைப்பதற்காக நமக்குக் கடன் வழங்குகின்றன. எனவே, விவசாயிகளுக்கு நெல்லுக்கான உத்தரவாத விலைகள் பிரச்சினையில் அரசாங்கத்தையே விமர்சிக்க முடியாது.

ஆனால் ஒரு நாடாக எடுத்துக்கொண்டால் அரசாங்கம் விவசாயிகளுக்காக அதிகபட்ச அர்ப்பணிப்பைச் செய்ய முடியும். அரிசி உற்பத்தி என்பது ஒரு கடினமான பணியாகும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரான மதிப்பீடுகளின்படி, ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய அரசாங்கத்திற்கு 220 ரூபாய் செலவாகியது. உர மானியங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளுக்கு செலவிடப்பட்ட தொகை, விவசாயிகளின் உழைப்புக்காக ஒதுக்கப்படும் தொகை, நெல் வயலுக்கான நில வாடகை, நெல் வயல்களுக்கு நீர் வழங்குவதற்கான செலவை கருத்தில் கொண்டு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.220 செலவிட்டது.

இன்று, இந்த எண்ணிக்கை சுமார் 350 ரூபாயாக இருக்க வாய்ப்புள்ளது. நாம் எப்படியும் கடனில் சிக்கித் தவிக்கும் ஒரு நாடு என்பதால், அரசாங்கம் ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய ரூ. 500 செலவிட்டாலும், அது மக்களுக்கு எந்தப் பயனையும் அளிக்காது. அரசாங்கம் நிலைமையைப் புரிந்துகொண்டு நெல்லுக்கான உத்தரவாத விலை தொடர்பாக விரைவில் நிவாரணம் வழங்குவதே சிறப்பான விடயமாகும்.

கவிதா பிரபாகர்



# விடுதலை

தாயின்
கருவறைச் சிறையில்
அடைபட்ட நாள் முதலே....
ஏற்பட்டது நம்
விடுதலை வேட்கை...!

இன்பச் சிறையில்
சுகமாக பத்து மாதம்
கழிந்த பின்..
தாயே தந்தாள்
நமக்கு முதல்
விடுதலை....!

சுகமாக ரசித்தோம்
நம் தாய் தந்த
சுதந்திரத்தை ....!
கால ஓட்டத்தில்
எத்தனையோ சிறைகள்
நம்மை சூழும் என்று
நாம் அறிந்தோமா....?

ஜாதி, மத பேதமென்றும்...
ஆன்டான், அடிமை என்றும்...



இல்லாமை, இயலாமை..என்றும்
முடியாமை, முயலாமை என்றும்...
கல்லாமை, அறியாமை என்றும்..
எத்தனையோ சிறைகள்
நம்மை சூழ்ந்த போதிலும்...
போராடத் தயங்கியதில்லை....!

தயங்கி நாம் இருந்திருந்தால்
பரிணாம மாற்றம் என்பதை
அடைந்திருப்போமா....?
நாகரிக வளர்ச்சி என்பதைதான்
உணர்ந்திருப்போமா...?


எத்தனையோ மாற்றங்களை

நாம் அறிந்த பின்னும்,
உணர்ந்த பின்னும்
மனிதனை மனிதன் அழித்து
சுகம் காணும்
மனித வடிவில் வாழும்
மனித மிருகங்களிடம் இருந்து
விடுதலையை
நாம் இன்னும் பெறவில்லையே...!

இருந்தும்
நாம் ஓய்வோமா...?
சுதந்திர வேட்கையைதான்
தணிப்போமா...?

நம் போராட்டத்தின்
வெற்றி முழக்கத்தின் ஓசை...
மனிதனை கொல்லும்
மனித மிருகங்களை
அழிக்கும் வரை.
தொடர்வோம்
நம் போராட்டத்தை.... !
பெறுவோம் நம் விடுதலையை...!!

தனபாலசிங்கம்



# மாவையின் அரசியல் வாழ்வின் படிப்பினைகள்



**இலங்கை** தமிழ் அரசியல் சமுதாயம் ஒரு குறுகிய கால இடைவெளியில் இரு மூத்த அரசியல் தலைவர்களை இழந்துவிட்டது. இருவருக்கும் இடையில் சுமார் பத்து வயது வித்தியாசம் இருந்த போதிலும், அவர்கள் ஆறு தசாப் தங்களுக்கும் அதிகமான காலத்தை இலங்கை தமிழர்களின் ஜனநாயக ரீதியான அரசியல் உரிமைப் போராட்டத்துக்காக அர்ப்பணித்தவர்கள்.

இராஜவரோதயம் சம்பந்தன் மரணமடைந்து ஏழு மாதங்கள் நிறைவடைவதற்கு இரு நாட்கள் இருந்த நிலையில் மாவை சேனாதிராஜா 2025 ஜனவரி 29ஆம் திகதி புதன்கிழமை காலமானர். அவரது இறுதிக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊரான மாவிட்டபுரத்தில் பெருமளவு மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றன.

மாவை சேனாதிராஜாவையும் சம்பந்தனையும் பல்வேறு அம்சங்களில் ஒப்பீடு செய்ய முடியாது என்ற போதிலும், உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் இலங்கை தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்த பிரதான அரசியல் இயக்கத்தின் தலைமைப் பொறுப்புக்களில் இருந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு ஒற்றுமை இருந்தது.

தமிழ் அரசியல் சமுதாயம் முன்னெப்போதையும் விட படுமோசமான முறையில் சிதறுண்டு பொறுப்புவாய்ந்த ஒரு தலைமைத்துவம் இல்லாமல் நெருக்கடியில் சிக்கியிருப்பதால் இருவரும் தங்களது இறுதி நாட்களை பெரும் வேதனையுடனேயே



கழித்திருப்பார்கள் என்பதில் இன்னொரு ஒற்றுமையும் அவர்களுக்கு இடையில் இருக்கிறது. அத்தகைய ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைக்கு அவர்களே பெருமளவுக்கு பொறுப்பும் கூட. இறந்தவர்களைப் பற்றி கெடுதியாகப் பேசுவதைத் தவிர்ப்பது ஒரு பாரம்பரியப் பண்பாக பொதுவில் கருதப்படுகிறது. மனிதர்களாகப் பிறந்த நாம் எல்லோரும் ஒரு நாள் இறக்கத்தான் போகிறோம். ஆனால், வாழும் காலத்தில் எமது வாழ்க்கைமுறை மற்றும் செயற்பாடுகள் மூலமாக எத்தகைய மரபை நாம் விட்டுச் செல்லப் போகிறோம் என்பதே முக்கியமானதாகும். அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை, இது மேலும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தங்களைப் பின்பற்றியவர்கள் தொடர்ந்து அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள் விட்டுச் சென்றிருக்கக் கூடிய வழிகாட்டல்களையும் அவர்களின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகளில் இருந்து பெறக்கூடிய படிப்பினைகளையும் விமர்சன அடிப்படையில் ஆராய்வது எதிர்காலத்துக்கான சரியான பாதையை தீர்மானிக்க உதவும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

மாணவப் பருவத்தில் இருந்தே இலங்கைதமிழரசு கட்சியின் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சேனாதிராஜா தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தில் பல வருடங்கள் சிறைவாசத்தை அனுபவித்ததுடன் கணிசமான தியாகங்களைச் செய்த ஒரு அரசியல் தலைவர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம் போன்ற முன்னைய முதுபெரும் தலைவர்களுடன் நெருக்கமாகச் செயற்பட்ட அவர் பேரினவாத மேலாதிக்கத்துக்கு எதிரான தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் அடையாளமாக நீண்டகாலமாக விளங்கிய ஒருவர்.

சேனாதிராஜாவை அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக அறிந்தவரான மூத்த பத்திரிகையாளரும் முக்கியமான அரசியல் ஆய்வாளருமான நண்பர் டி.பி.எஸ். ஜெயராஜ் சேனாதிராஜாவின் மறைவையடுத்து கடந்த வாரம் எழுதிய கட்டுரை ஒன்றில் தியாகங்கள் நிறைந்த போராட்டங்களைச் செய்த இளம் சேனாதிராஜாவை நினைவில் வைத்திருப்பவர்கள் அவரை கண்டனம் செய்யவோ அல்லது விமர்சனம் செய்யவோ தயங்குவார்கள் என்றும் அவரிடம் பிற்காலத்தில் ஏற்பட்ட விரும்பத்தகாத மாற்றத்துக்கு மத்தியிலும் கடந்தகாலத்தை நினைவில் வைத்து அவர் மீது அவர்கள் தொடர்ந்தும் அனுதாபம் காட்டினார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

சேனாதிராஜா அவரது இறுதிக்கால அரசியல் வாழ்க்கைக்காக அல்ல, கடந்தகால தியாகங்களுக்காக மாத்திரமே நினைவு கூரப்பட வேண்டியவர் என்பதே பெரும்பாலானவர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. அரசியல்வாதிகள் தங்களது அரசியல் வாழ்வின் தொடக்கத்தில் எத்தகைய தியாகத்தைச் செய்திருந்தாலும், தலைமைத்துவப் பொறுப்புக்கு வந்த பிறகு அவர்கள் தாங்கள் தலைமை தாங்கும் இயக்கத்துக்கும் மக்களுக்கு எவ்வாறு வழிகாட்டுகிறார்கள் என்பதும் வாழும் முறையால் எவ்வாறு முன்னுதாரணமானவர்களாக விளங்குகிறார்கள் என்பதுமே அவர்களின் மரபாக வரலாற்றில் நினைவு கூரப்படும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இலங்கை தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மடியில் தானாக வந்து வீழ்ந்தது. அதன் தலைவராக இருந்த சம்பந்தன் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் தமிழ் மக்களின் வலுவான ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு தன்னை எந்தளவுக்கு அர்ப்பணித்தார் என்பதும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு இசைவாக எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமான முறையில் முன்னெடுப்பதற்குத் தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதுமே அவரின் அரசியல் மரபாக நினைவு கூரப்படும் என்று கடந்த வருடம் நடுப்பகுதியில் அவரின் மறைவுக்குப் பிறகு நான் குறிப்பிட்டிருந்தேன்.

2004 நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வீடு சின்னத்தில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட காரணத்தினால், நீண்டகால உறங்கு நிலையில் இருந்த தமிழரசு கட்சி புத்துயிர் பெற்றது. அதற்கு பின்னரே அந்தக் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவ கட்சியாக தன்னை ஒப்பீட்டளவில் முனைப்புடன் மீண்டும் காட்டிக் கொள்ளக் கூடிய சூழ்நிலை தோன்றியது.

கடந்த இருபது வருடங்களாக ஒருவருக்கு பின் ஒருவராக தமிழரசு கட்சிக்குத் தலைமை தாங்கிய சம்பந்தனையும் மாவை சேனாதிராஜாவையும் தவிர, கூட்டமைப்பின் சிதைவுக்கும் தமிழரசு கட்சியின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கும் வேறு யாரை பொறுப்பு என்று கூறமுடியும்?

தமிழரசு கட்சியைப் போன்று உள்ளக முரண்பாடுகளினால் சீரழிந்து கொண்டிருக்கும் வேறு எந்தவொரு கட்சியையும் இன்று இலங்கையில் காணமுடியாது. கடந்த வருட முற்பகுதியில் அந்தக் கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்வதற்கு பொதுச் சபையில் நடத்தப்பட்ட தேர்தலும்





இதற்கு முக்கியமான காரணம்.

தமிழரசு கட்சியின் 75 வருடகால வரலாற்றில் முன்னர் ஒருபோதுமே தலைவரை தெரிவு செய்வதற்கு தேர்தல் நடத்தப்பட்டதில்லை. தேர்தலை நடத்தினால் கட்சியின் அணிகளுக்குள் முரண்பாடுகள் வளர்வதைத் தவிர்க்க முடியாது என்பதை தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேயே தமிழரசு கட்சியின் தாபகத் தலைவர்கள் ஏகமனதாக தலைவரை தெரிவு செய்யும் பாரம்பரியத்தை கடைப்பிடித்து வந்தனர்.

1970 களின் முற்பகுதியில் தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு அமிர்தலிங்கத்துடன் போட்டிடுவதற்கு முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரை முயன்ற வேளையில் அவருக்கு ஆலோசனை கூறி இணங்கவைத்து செல்வநாயகம் ஏகமனதாக அமிர்தலிங்கம் தெரிவாவதற்கு வழிவகுத்தார்.



புதிய தலைவரை பாரம்பரியத்தின் பிரகாரம் ஏகமனதாகவே தெரிவு செய்யவேண்டும். தமிழரசு கட்சியின் நலன்களில் அக்கறை கொண்ட தரப்புகள் இடையறாது வேண்டுகோளை விடுத்த போதிலும் கூட சம்பந்தனாலேயோ அல்லது சேனாதிராஜாவினாலேயோ தேர்தலைத் தடுக்க முடியவில்லை.

ஒரு வகையில் நோக்கினால், அந்தத் தேர்தல் போட்டியின் விளைவாக ஏற்படக்கூடிய சூழ்நிலையை தங்களது அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்துவதில் அவர்கள் மறைமுகமாக அக்கறை காட்டினார்கள் எனலாம்.

அத்துடன், அவர்கள் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதில் அக்கறை காட்டாமல் இறுதிவரை பதவிகளில் இருப்பதிலேயே நாட்டம் காட்டினார்கள். அதனால் கட்சிக்குள் அவர்கள் மீதான மதிப்பும் மரியாதையும் கூட குறைவடையத் தொடங்கியது.

தங்களது அனுபவத்துக்கும் மூப்புக்கும் பொருத்தமான முறையில் நடுநிலையாக அவர்கள் செயற்படவில்லை. மாறாக முரண்பாடுகளை ஊக்குவிக்கக்கூடிய அணுகுமுறைகளையே அவர்கள் கடைப்பிடித்தார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்களினதும் கட்சியினதும் நலன்களுக்கும் மேலாக சம்பந்தனும் சேனாதிராஜாவும் தங்களது அரசியல் நலன்களுக்கும் பதவி நிலைகளுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டார்கள். அதன் விளைவாகவே தமிழரசு கட்சி இன்று சீரழிவுக்கு உள்ளாகியிருக்கிறது.

தலைவர் தேர்தல் ஒரே கட்சியைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலானதாக அன்றி இரு அரசியல் எதிரிகளுக்கு இடையிலானதைப் போன்றே அமைந்திருந்தது. அந்தத் தேர்தலில் போட்டியிட்ட இருவரும் கடந்த ஒரு வருட காலமாக கடைப்பிடித்து வருகின்ற அணுகுமுறைகளும் அவற்றின் விளைவாக வடக்கில் தமிழரசு கட்சி' மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்த சூழ்நிலைகளும் புறம்பாக ஆராயப்பட வேண்டியவை.

சம்பந்தனின் மறைவுக்குப் பிறகு கடந்த ஏழு மாதகாலமாக சேனாதிராஜா நடந்து கொண்ட விதம் அவரது பல தசாப்தகால அரசியல் அனுபவத்துக்கு எந்தவகையிலும் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை. அதன் விளைவாக தமிழரசு கட்சிக்குள் தனது அந்தஸ்தை தீர்மானிப்பதில் எந்த விதமான செல்வாக்கையும் செலுத்த முடியாத பரிதாப நிலை அவருக்கு ஏற்பட்டது மாத்திரமல்ல, அவருக்கு விசுவாசமானவர்கள் என்று தங்களை அடையாளம் காட்டிக் கொண்டவர்கள் கூட அவரைப் பாதுகாக்க முன்வராமல் வெறும் பார்வையாளர்களாக இருந்தனர்.

அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் எவ்வாறு செயற்படக் கூடாது என்பதற்கு மாத்திரமல்ல, ஒரு கட்சி அதன் மூத்த தலைவரை எவ்வாறு நடத்தக்கூடாது என்பதற்கும் கூட மாவை சேனாதிராஜா ஒரு உதாரணமாகும்.

இது நிச்சயமாக இன்றைய மற்றைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு குறிப்பாக தமிழரசு கட்சி அரசியல்வாதிகளுக்கு ஒரு படிப்பினையாக அமையவேண்டும். அதை அவர்கள் உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்புவது கஷ்டம்.

வழமையாக அரசியல் தலைவர்களின் இறுதிச் சடங்குகள் பிளவுபட்டு நிற்கும் அவர்களின் கட்சிகளின் அணிகள் வேறுபாடுகளை மறந்து ஐக்கியப்பட்டுச் செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதே இயல்பாகும். ஆனால், ஒரு அரசியல் தலைவரின் இறுதிச்சடங்கு எவ்வாறு நடத்தப்படக் கூடாது என்பதற்கு கடந்த வாரம் மாவிட்டபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் உதாரணமாக அமைந்து விட்டது கவலைக்குரியதாகும்.

தமிழரசு கட்சிக்குள் பிளவுபட்டு நிற்கும் அணிகள் எதிர்காலத்தில் இணக்கப்பாட்டுக்கு வந்து ஐக்கியமாக அரசியல் பயணத்தை தொடராமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட சக்திகளே மாவை சேனாதிராஜாவின் இறுதிச் சடங்குகளை பொறுப்பேற்று நடத்தினார்கள் போன்று தெரிகிறது.

# லசந்த விக்கிரமசிங்கவிற்கு அரசு வழங்கும் நீதி




நவீன்

# தமிழ் ஊடகர் கொலைகளுக்கு நியாயம் இல்லையா?

**கடந்த** வருடம் வெளியிடப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் லசந்த விக்கிரமசிங்க உட்பட பல ஊடகர்களின் படுகொலைக்கான நீதி கிடைக்கும் என உறுதியாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமசிங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே இருக்கிறோம் என பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் நீதி அவசியம். லசந்தவின் குடும்பம் போன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் படுகொலை செய்யப்பட்ட பல ஊடகவியலாளர்களுக்கு நீதி இதுவரை கிடைக்கவில்லை.

நிமலராஜன் தொடக்கம் இசைப்பிரியா



வரை இவர்களுக்கான நீதியையும் பிரதமர் பெற்றுக் கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ் ஊடகர்கள்:

2000 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் இலங்கை வீதிகளில் உலா வரும் வெள்ளை வான்களும் திடீரென தொலைந்து போகும் பத்திரிகையாளர்களும் மிக எளிதாகக் கடந்துபோகக் கூடிய ஒரு நிகழ்வுகளாக இருந்தமையை நாம் மறந்து விட முடியாது.

பத்திரிகையாளர்கள் முன்னைய ஆளும் அரசுகளுக்கு எதிரானவர்களாகச் சித்திரிக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக மயில்வாகனம் நிமலராஜன், பிரகீத் எக்னலிகொட, சிவராம் தராக்கி, கெய்த் நோயார், லசந்த விக்கிரமதுங்க, போடல ஜெயந்தா என அநீதி இழைக்கப்பட்டு கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல் நீண்டதாகும். ஆனாலும் போருக்குப் பின்னரான கடந்த ஆண்டுகளில் இலங்கைப் பத்திரிகையாளர்களின் வாழ்க்கை என்பது ரத்தத்தாலும் காயங்களாலும் எழுதப்பட்டிருக்கிறது. அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பத்திரிகையாளர்களின் நிலை என்ன என்பதை அறியாமல் கொலை செய்யப்படும் அளவுக்குக் கொண்டு சென்றதும் வரலாறாகும்.

போர்க்காலங்களில் அரசின் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்து தங்கள் குரல் வளைகள் நெறிக்கப்பட்ட நிலையிலும் இறுதிவரை போராடி வந்த கடந்தகால பத்திரிகையாளர்களே அந்தப் போராட்டச் சூழலில் மக்களின் நம்பிக்கை குரல்களாக அடையாளம் காணப்பட்டு இருக்கின்றனர்.

பத்திரிகையாளர்கள் எதிர்கொண்ட கடினமான தருணங்களை தற்போது நினைவுகூர வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

## பிரதமர் ஹரிணி அதிகளவில் கரிசனை:

2009 இல் கொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அரசாங்க தரப்புக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் மற்றும் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணைகள் தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றிலும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தது.

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்கவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்க அனுப்பிவைத்த கடிதம் எனக்கு கிடைத்தது என்றும், அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பார்த்து வேதனையடைந்தேன் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

பதில் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். அதிகளவில் கரிசனை கொண்டுள்ளேன். லசந்த விக்கிரமசிங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே இருக்கிறோம் என பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

இதே வேளை படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க தொடர்பில் சட்ட மாஅதிபர் திணைக்களம் பொறுப்புக்கூற வேண்டும், படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க விவகாரம் தேசிய பிரச்சினையாகவே பார்க்கப்பட வேண்டும் என்று தேசிய ஊடக சங்கம் வலியுறுத்து வருகிறது.

## அனுர அரசு நீதியை நிலைநாட்டுமா?

சிறிலங்கா நீதிமன்றம், சட்ட மா அதிபர் திணைக்களம் நீதியை நிலை நாட்டுவதற்காகவே செயற்படுகிறது என்றும், அதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் ஆளும் பிரதமர் கூறியுள்ளார்.

கொலையாளிகளின் தற்போதய நிலைவரம் குறித்து புதிய விசாரணைகளை மேற்கொள்ளவும், சாட்சியம் திரட்டவும் ஆலோசிக்கப்படும் என்றும், அதற்கான வலியுறுத்தலை சட்ட மாஅதிபரிடம் முன்வைப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் சட்ட மாஅதிபர் திணைக்களம் அரசியல் பிடிக்குள் சிக்குப்படாமல் இருப்பதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும் என்பதை




குறிப்பிட்டுக் கொள்கிறேன் என பிரதமர் ஹரிணி பாராளமன்றில் தெரிவித்துள்ளார்.

## கொலையான ஊடகர்களுக்கு நீதி கிடைக்குமா?

ஈழப்போர் தீவிரமடைந்த காலகட்டங்களில் 1990 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் திடீரென பத்திரிகையாளர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் பல அரங்கேறின. மிக்க ஆளுமையான மயில்வாகனம் நிமலராஜன், பிரகீத் எக்னலிகொட, சிவராம் தராக்கி, கெய்த் நோயார், லசந்த விக்கிரமதுங்க, போடல ஜெயந்தா என அநீதி இழைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல் பெரிதாகும்.

தராக்கி என்ற புனைப்பெயருடன் எழுதி வந்த தமிழ் ஊடகவியலாளர் சிவராம், முன்னைய அரசுகளுக்கு பல விமர்சன கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார். அவர் எழுதியது போல, தன்னுடைய ஊடக நண்பர் நடேசன் கொலை செய்யப்பட்டபோது, அரசின் அடுத்த குறி தானாக இருக்கலாம்






என்று நண்பர்கள் பலர் தன்னை எச்சரித்ததாகக் காணொலி ஒன்றில் பதிவுசெய்திருந்தார்.

அவர் பதிவிட்டதைப் போல, 2005 ஏப்ரல் 28 அன்று வெள்ளை வானில் கடத்தப்பட்ட சிவராம் அடுத்த நாள் கொலையுண்ட நிலையில் சடலமாகக் கிடைக்கப்பெற்றார். இதே போல் கொல்லப்பட்ட மற்றொரு பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க. தான் கொல்லப்படப் போகிறோம் என்பதை அறிந்த லசந்த, தனது இறுதி தலையங்கத்தைத் தன் இறப்பிற்குப் பிறகு பிரசுரிக்கச் சொல்லி தனது ஊடக ஊழியர்களிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

2,500 வார்த்தைகளைக் கொண்ட அந்தத் தலையங்கத்தை அவர் தனது அலுவலகக் கணினியில் ‘ஃபைனல் எடிட்’ (Final Edit) எனக் குறிக்கப்பட்ட கோப்பில் சேமித்து வைத்திருந்தார். அவர் கொலையின் பின்னர் அந்த 2,500 வார்த்தை தலையங்கத்தை உலகின் முன்னணிப் பத்திரிகைகள் அனைத்தும் பிரசுரித்தன.

‘எனது படுகொலை சுதந்திரத்தின் தோல்வியாகக் கருதப்படாது, உயிர் பிழைப்பவர்களுக்கு ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்’ என்று அந்தத் தலையங்கத்தை முடித்திருந்தார் லசந்த விக்கிரமதுங்க. இதன் பின்னர் போடல ஜெயந்தா, கெய்த் நோயார் போன்றோர் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். 2010-ம் ஆண்டு ஜனவரி 24, ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் காணாமல் போன கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்னலிகொடவின் நிலை என்னவென்று இன்றுவரை தெரியவில்லை.

## ஆட்கடத்தல்களும் காணாமல் போதலும்:

இலங்கையில் ஆட்கடத்தல்களும் காணாமல் போதலும் 1980 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்த வண்ணம் உள்ளன. இலக்கத் தகடு அற்ற வாகனங்களில் (வெள்ளைவான்) வரும் இனம் தெரியாத குழுக்களினால் பலவந்தமாக இந்த வாகனங்களுக்கு ஏற்றப்பட்ட நபர்கள் பின் காணாமல் போயினர்.

போர் நடந்த வருடங்களில் இலங்கையில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளார்கள். உலகில் இலங்கையிலேயே அதிகமானோர் காணாமல் போவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

காணாமல் போவதற்கு அரசே காரணம் என பல காணாமல் போனவர்களின் உறவினர்களும் சாட்சியங்களும் கூறிய போதும் முன்னைய அரசுகள் எந்தவித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும், இத்தகைய குற்றசெயல்களை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையங்கள் சரிவர தமது வேலையை செய்யவில்லை என்று அதைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சர்வதேச சுயாதீன குழு தெரிவித்துள்ளது.

## ஊடகர் இசைப்பிரியா:

ஊடகத்துறையில் பணியாற்றியதுடன் கலைத்துறையிலும் சிறப்பான படைப்புக்களை வழங்கிய இசைப்பிரியா இறுதிப் போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மே 17 திகதி வட்டுவாகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைந்தார்.

அதன் பின்னர் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார் என்பதற்கான ஆதாரங்கள் சனல் நான்கு ஊடகத்தின் ஊடாக வெளிவந்தன. அதன் அடிப்படையில் சரணடைந்த ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்ட முறை மனித குலமே வெட்கித் தலை குனியும் அளவுக்கு அசிங்கமானது.

தற்போதய பிரதமர் இசைப்பிரியாவுக்கான நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இறுதிப் போரில் இசைப்பிரியாவின் கணவன் சிறிராம் கொல்லப்பட்டதுடன் அவரது மகள் அகல்யா பிறந்து இரண்டு மாதங்களில் மருத்துவ வசதியும் பால்மாவும் இல்லாமையால் புதுமாத்தளனில் இறந்தமை உலகு அறிந்ததே.

அத்தனை துயரங்களையும் சுமந்து கொண்டு சரணடைந்த இசைப்பிரியா இறுதியில் படுகொலை செய்யப்பட்டார். இவருக்கான நீதி விசாரணை எப்போது கிடைக்கும் என்பது தெரியவில்லை.

லசந்தவின் குடும்பம் போன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் படுகொலை செய்யப்பட்ட பல ஊடகர்களுக்கு நீதி இதுவரை கிடைக்கவில்லை. நிமலராஜன் தொடக்கம் இசைப்பிரியா வரை இவர்களுக்கான நீதியையும் பிரதமர் பெற்றுக் கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.





முருகையா தவமணி தேவி

# வைரசாக பெருகும் தற்கொலைகளும் உயிரின் வலிகளும்



**தற்கொலை** எனப்படுவது விருப்பத்துடன் ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்ளல் அல்லது தனது உயிரை மாய்த்துக் கொள்ளும் செயலாகும். இது சிறுவர் முதல் பெரியோர் வரை நிகழும் நிகழ்வாகும். ஒன்றோ அல்லது பல காரணங்களோ தற்கொலைக்கு தூண்டலாம். எமது உடல் தாங்கும் இந்த உயிரானது என்றோ ஒரு நாள் பிரியத்தான் போகின்றது. மானிடராக பிறந்த ஒவ்வொருவரும் இறப்பது நிச்சயமே. ஆம்! இவ்வாறு இயற்கையின் விதியில் பிரியும் இவ் உயிரை ஏன் பலவந்தமாக மாய்த்துக் கொள்ள வேண்டும்.

தற்கொலையை தூண்டுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அதில் குடும்ப காரணிகள், சமூகக் காரணிகள், பொருளாதார பிரச்சினைகள் போன்றவை பெரும்பாலும் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வகையில் தற்கொலை தொடர்பான செய்திகளை நாம் அறிகின்றோம். எதனால் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுகின்றன என சற்று ஆழ்ந்து நோக்கினால் உயிரியல், உளவியல், சமூகவியல் காரணங்கள் இதற்கு பின்னணியில் உள்ளன.

மன அழுத்தமே 90% ஆன தற்கொலைகளுக்கு காரணமாக அமைகின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. எமது சமூகத்தில் இவ்வாறான மன அழுத்தத்திற்கு ஆளாகி உள்ளவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியுமா? உளவியல் ரீதியான பிரச்சினைகள் இன்றைய தலைமுறையினருக்கு அதிகமாக காணப்படுகின்றது.

ஏன் இவர்களால் சவால்களை சமாளிக்க முடிவதில்லை?



இவர்கள் ஏன் தனது இறுதி முடிவாக தற்கொலையை தெரிவு செய்கின்றனர்? ஒருவர் தன்னை மாய்த்துக் கொண்ட பிறகு அவரின் பிரச்சினைகளை ஆய்வு செய்யும் எமது சமூகம் ஏன் அவரது உளவியல் மாற்றங்களை, அவரது செயற்பாடுகளின் மாற்றங்களை அறிந்து அதற்கான தீர்வினை பெற்றுக் கொடுப்பதில்லை?

நவீன உலகில் வாழும் நாம் நவீன ஊடகங்களுக்கு ஏற்ற வகையில் எமது செயற்பாடுகளையும் இயந்திர மயமாக்கிக் கொண்டோம். எமது வாழ்நாளின் சந்தோசமான தருணங்களை அனுபவிக்கத் தவறுகின்றோம். நமது உளவியல் பிரச்சினைகளை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள மறுக்கின்றோம். அவ்வாறு பகிர்ந்து கொள்வது எமக்கு அவமானங்களாக கருதுகின்றோம்.

இதனால் பல்வேறுபட்ட உளவியல் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றோம். இதனால் நோய்வாய்ப்படுகின்றோம். எமது சிந்திக்கும் ஆற்றல் குறைகின்றது. மூளையின் செயற்பாடுகள் குறைகின்றன. எமது செயற்பாடுகளில் மந்த நிலை ஏற்படுகின்றது. எனவே தற்கால இயந்திரமயமாக்கப்பட்ட எமது வாழ்வின் சுக துக்கங்களை எமக்கு நம்பிக்கையானவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். மற்றோர் கூறும் கருத்துக்களை செவிமடுக்க வேண்டும். இதனால் அவர்களின் மன அழுத்தம் ஓரளவு குறைக்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் மன அழுத்தத்திற்கு ஆளானவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். அதற்கான சிகிச்சையாக குடும்பத்தின் ஒற்றுமை, மகிழ்ச்சி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வீட்டில் உள்ளவர்களின் தேவைகள் பூரணப்படுத்தப்படல், சந்தேகம் இன்மை, ஆரோக்கியம், அன்பு, அரவணைப்பு, பொருளாதாரம் என்பன காணப்படுகின்றன.

இவற்றை கவனத்தில் கொண்டு செயற்படும் போது குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லிணக்கப்பாடு ஏற்படும். எதிர்மறையான எண்ணங்கள் தோன்றாது. இது தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் இருப்பவரை சற்று சிந்திக்க செய்யும்.

தற்கொலை முயற்சியில் ஒரு முறை ஈடுபட்டவர் எதிர்காலத்தில் மீண்டும் தற்கொலை முயற்சி மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன. எம்மால் தற்கொலையை தடுக்க இயலுமா? மனஉளைச்சலுக்கு ஆளானவர்களை இனம் கண்டு கொள்வதன் மூலமும் தனது பிள்ளைகளை முறையாக வழிநடாத்துவதன் மூலமும் தற்கொலை முயற்சிகளை தடுக்க முடியும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை சமூக சூழ்நிலைகளை சமாளிப்பவர்களாகவும், எதிர்காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையிலும் பழக்கப்படுத்த வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் முறையான தெளிவான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். தற்கொலை செய்து கொண்ட பின் தனது குடும்பம் எதிர்கொள்ள போகும் பிரச்சினைகள் பற்றி பேச வேண்டும். சமூகமட்டத்தில் இந்நிகழ்வு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

எமது சமூகத்தில் ஒருவரினது சடுதியான மாற்றங்கள் அவதானிக்கப்பட வேண்டும். அதற்கான காரணங்களை அறிந்து தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை அவரிடம் ஏற்படுத்த வேண்டும். அவர்களிடம் உள்ள எதிர்மறையான எண்ணங்களை அகற்ற வேண்டும்.

இவ்வாறு நாம் செய்யும் போது அவர்களிடம் உள்ள தற்கொலை தொடர்பான எண்ணங்கள் முறியடிக்கப்படுகின்றன. எனவே மனிதாபிமான முறையில் செயற்பட்டு தற்கொலை எனும் சொல்லை அகராதியிலிருந்து நீக்குவோம்.



**தற்கொலையை தூண்டுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அதில் குடும்ப காரணிகள், சமூகக் காரணிகள், பொருளாதார பிரச்சினைகள் போன்றவை பெரும்பாலும் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வகையில் தற்கொலை தொடர்பான செய்திகளை நாம் அறிகின்றோம். எதனால் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுகின்றன என சற்று ஆழ்ந்து நோக்கினால் உயிரியல், உளவியல், சமூகவியல் காரணங்கள் இதற்கு பின்னணியில் உள்ளன.**

# எதுவும் சில காலம்



முல்லை பாஸ்கர்

தனிமை ஒரு அழகு
தவம் ஒரு வரம்
இனிமை மருந்து
சில காலங்களுக்கு
அதுவே நிலைத்து விட்டால்.?

நிசப்தம் ஒரு ராகம்
ரம்யம், ரசனை சில காலங்களுக்கு
அதுவே நிலைத்து விட்டால்?

மௌனம் ஒரு மொழி
புரிதல் பதில் சில காலங்களுக்கு
அதுவே நிலைத்து விட்டால்?

நதியைப் போல் ஓடிக்கொண்டிரு!
நிம்மதி வேண்டுமென்று
ஆசைப்படுகிறோம்.
ஆனால்,
ஆசையை கைவிட மறுக்கிறோம்!

தோல்விக்கு மட்டுமே
தனிமை தேவைப்படுகிறது
ஆனால்.
வெற்றியின் பக்கத்தில்
பெரும் கூட்டம்!!

வெற்றியால் மட்டுமே
உன் வாழ்க்கையை
நீ திட்டமிட முடியும்!!
இல்லையென்றால்.
உன் வாழ்க்கை
வேறு ஒருவர் கையில்!!



தரன் ஸ்ரீ

# யார் நீதிமான்கள்?

**வியட்நாம்** நாட்டின் மீது வல்லரசுகள் என்று கூறும் சர்வதேசங்கள் அமெரிக்கா தலைமையில் அன்று எழுதிய தீர்ப்புகளும் நீதிகளும்.

இன்று வல்லரசாக முதன்மை நிலையில் இருக்கும் அமெரிக்காவுக்கு போராட்டத்தின் நுணுக்கங்களை கற்றுக் கொடுத்து ஒரு சிறிய நாடு வியட்நாம். அது வியட்நாமின் போராட்ட வெற்றிப்பாதைக் காலங்கள். காலங்கள் கடந்தும் மறக்க முடியாத வலிகளை அமெரிக்கா இன்று சுமந்து கொண்டிருந்தாலும் சர்வதேச மட்டத்தில், கடந்து போகும் வரலாற்றில் இன்றும் அவர்கள் தங்களை வெற்றியாளர்களாகத்தான் அடையாளப் படுத்துகிறார்கள்.

ஏஜென்ட் ஆரஞ்ச் என்பது மிகக் கொடிய நச்சுத்தன்மை உள்ள தாவரக் கொல்லி வேதிப் பொருள்.

வியட்நாம் மீது அமெரிக்கா படையெடுத்து ஆக்கிரமித்தபோது அதை எதிர்த்துப் போராடிய வியத்காங் என்ற உள்நாட்டுப் படையினர் கொரில்லா தாக்குதலில் ஈடுபட்டனர். வியத்காங் படையினர் காடுகளில் ஒளிந்திருந்தது அமெரிக்காவின் வலிமையான ராணுவத்துக்குப் பெரும் சவாலாக இருந்தது.

விமானத் தாக்குதல் நடத்துவதென்றால் வியத்காங்குகள் எங்கே பதுங்கியிருக்கிறார்கள் என்பது தெரியவேண்டும். ஆனால் வியட்நாமின் அடர்ந்த காடுகள் விமானத்தில் இருந்து கண்காணித்து அவர்கள் பதுங்கியிருக்கும் இடத்தைப் பார்க்கத் தடையாக இருந்தது.

அதற்காக ஏஜென்ட் ஆரஞ்ச் என்ற தாவரக் கொல்லியை அந்தக் காடுகள் மீது விமானம் மூலம் தூவியது அமெரிக்கா. இதனால் அடர்ந்து சடைத்த தாவரங்கள் மரங்கள் கருகி வியத்காங்குகள் பதுங்கியிருந்த இடங்கள் தெரியத் தொடங்கின.

1962 முதல் 1971 வரை போரில் பயன்படுத்தப்பட்ட இந்த ஏஜென்ட் ஆரஞ்ச் தாவரக் கொல்லியில் டயாக்சின் என்ற





கொடிய நச்சுப் பொருள் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் மிக அதிகமாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த ஏஜெண்ட் ஆரஞ்ச் பயன்படுத்தப்பட்ட பகுதிகளில் புற்றுநோயும் குழந்தைகள் பிறவிக் குறைபாடுகளுடன் பிறப்பதும் அதிகரித்ததற்கு இந்த டயாக்சின்தான் காரணம் என்று கூறப்பட்டது.

பத்து லட்சக் கணக்கான மக்கள் இந்த ஏஜென்ட் ஆரஞ்ச் தாக்குதலில் பாதிக்கப்பட்டதாகவும் 1.5 லட்சம் குழந்தைகள் மோசமான பிறவிக் குறைபாடுகளோடு பிறந்ததாகவும் வியட்நாம் கூறுகிறது. வியட்நாம் போரில் அமெரிக்கப் படையினர் மொத்தம் 8 கோடி லிட்டர் ஏஜென்ட் ஆரஞ்ச் வேதிப் பொருளை தூவியிருப்பார்கள் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்த வேதிப் பொருளை நுகர நேர்ந்ததால் 1960 களில் இருந்து வியட்நாமில் பிறவிக் குறைபாடு, புற்றுநோய் போன்றவை பெரிய அளவில் அதிகரித்ததை அந்நாட்டு மருத்துவர்கள் கவனித்தனர். இந்த ஏஜென்ட் ஆரஞ்ச் பயன்பாட்டை அமெரிக்கா 1971ம் ஆண்டு நிறுத்தியது. 1975ம் ஆண்டு அமெரிக்கா வியட்நாமில் இருந்தே பின்வாங்கியது.

இது முடிந்து கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்குப் பிறகும் பல்லாயிரம் குழந்தைகள் ஒவ்வோர் ஆண்டும் பிறவிக் குறைபாடுகளோடு பிறப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள். இது வியட்நாமியர்களை மட்டுமல்ல, அங்கிருந்த அமெரிக்க ராணுவத்தினரையும் அவர்களது சந்ததிகளையும்கூட கடுமையாகப் பாதித்தது.

இந்த ரசாயன தாக்குதலில் முழுமையாக பாதிக்கப்பட்ட வியட்நாம் பெண்மணி ஒருவர் இன்று காலங்கள் கடந்தும் பிரான்ஸ் நாட்டில் ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார். வியட்நாம் போர் முழுவதையும் ஒரு பத்திரிகையாளராகப் பார்வையிட்டு எழுதிய டிரான் டோ ங்கா என்ற 78 வயது வியட்நாமிய - பிரெஞ்சு பெண் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

ஏஜென்ட் ஆரஞ்ச் தாவரக் கொல்லியை போரில் பயன்படுத்தியது தனக்கும் தன் குழந்தைகளுக்கும் தீங்கு விளைவித்ததாக அவர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஏஜென்ட் ஆரஞ்ச் பயன்படுத்தியதற்கு எதிராக பாதிக்கப்பட்ட குடிமக்களில் ஒருவரது வழக்கை நீதிமன்றம் விசாரணை செய்வது இதுவே முதல் முறை.

நான் எனக்காக மட்டும் போராடவில்லை என் குழந்தைகளுக்காகவும் பாதிக்கப்பட்ட பல பத்து லட்சம் பேருக்காகவும் நான் போராடுகிறேன் என்று வழக்கு விசாரணைக்கு முன்பாக கூறினார் ட்ரான் டோ ங்கா. புற்றுநோய், நீரிழிவு நோய் உள்ளிட்ட பல உடல் நலப் பிரச்சனைகளால் இவர் பாதிக்கப்பட்டுள்ளார். இதயம் கோளாறான முறையில் அமைந்திருந்த காரணத்தால் இவரது சகோதரி ஒருவர் இறந்துவிட்டார்.

இந்த வேதிப் பொருளின் பயன்பாட்டால் தமது உடல் நலம் பாதிக்கப்பட்டதற்காகவும், தனது குழந்தைகள் உள்ளிட்ட மற்றவர்களின் உடல் நலப் பாதிப்புகளுக்காகவும் இழப்பீடு கேட்டுள்ளார் ட்ரான் டோ ங்கா.

இந்த ஏஜென்ட் ஆரஞ்ச் தாக்குதலால் தாவரங்கள் அழிந்தன. விலங்குகள் உடலில் நஞ்சு ஏறியது. வியட்நாமின் மண்ணும், ஆறுகளும் மாசுபட்டன. எனவே இந்த தாவரக் கொல்லியால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பை அங்கீகரிக்க வேண்டும் என்றும் தனது வழக்கில் கோரியுள்ளார் அவர்.

50 ஆண்டுகளுக்கு முன் தாங்கள் நடத்திய





தவறுக்கு இன்றுவரை தீர்ப்பை எழுத முடியாதவர்கள் தங்களின் கடந்தகால தவறுகளை மறைத்து, மறந்து பிற நாடுகள் மீது ஆதிக்கத்தை செலுத்தி தீர்ப்புகளை வழங்க, தீர்ப்பை எழுத ஆசைப்படுகிறார்கள்.

வல்லரசுகள் என்றுமே தங்களது தோல்விகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்வருவதில்லை. எனக்கு சிறுவயதில் இருந்து ஆங்கிலப் படங்கள் பார்ப்பது மிகவும் பிடித்தமான ஒன்று. அதிலும் போராட்டங்கள் சம்பந்தப்பட்ட படங்களை அதிகம் பார்த்துள்ளேன். அமெரிக்கா - வியட்நாம் போராட்டங்கள் சம்பந்தமாக அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட திரைப்படங்கள் அனைத்தையும் பார்த்திருக்கிறேன். ஆனால் எந்தப் திரைப்படத்திலும் முடிவில் தமது தோல்வியை சித்தரிப்பதை ஏற்றுக்கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படத்தை நான் இதுவரை பார்க்கவில்லை. சாதாரணமாக ஒரு வரலாற்று திரைப்படத்தில் கூட தமது தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை இல்லாத சர்வதேசத்திடம் நாங்கள் அதிகம் எதிர்பார்க்கிறோம்.

எனது மனதில் தோன்றும் கேள்விகள் சில. இன்று சர்வதேசத்தின் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இலங்கை விடயத்தில் வரவேற்க வேண்டிய விடயம் தான். ஆனால் இவர்கள் கைகளில் 2009 இற்கு முன்பே இதே அதிகாரங்கள் இருந்தன. சிறிய நாடுகளை அடக்கி ஆளும் தன்மை கொண்ட மனப்பான்மை பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தி சாதகத் தன்மையை உருவாக்கும் தன்மை இப்படிக் கூறிக் கொண்டே போகலாம்.

அன்று (2009) எமது தாயகத்தில் அன்றாடம் உயிர்கள் பறிபோய் கொண்டிருக்கும் பொழுது வேடிக்கை பார்த்தவர்கள் தானே இவர்கள் அனைவரும். நாங்கள் அழிந்து கொண்டிருக்கும் பொழுது தடுப்பதற்கு யாரும் வரவில்லை.

அதிகமானவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்துகிறேன். யுத்தம் முடிந்ததும் உடனடியாக ஐக்கிய நாடுகளின் தலைவர் இலங்கைக்கு சிறப்பான தேனீர் விருந்துபசாரத்துக்கு வருகை தந்தார். ஏன்? அவரால் மூன்று வாரங்களுக்கு முன்னர், ஒரு மாதத்துக்கு முன்னர் உயிர்கள் பறி போய் கொண்டிருக்கும் பொழுது ஒரு விஜயத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஆம்! சர்வதேசம் வேடிக்கை பார்த்தது. எங்களுடைய அழிவுக்காக காத்திருந்தது.

தனக்கு தொகுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணி உடனடியாக இலங்கை வர முடிந்த அவரால் மக்கள் இறக்கும்வரை வர முடியவில்லை. ஐக்கிய நாடுகள் சபை, அதன் தலைமை வல்லரசுகள், சர்வதேசங்கள் நினைத்திருந்தால் எங்களை காப்பாற்றி இருக்க முடியும். நாங்கள் சிலரின் நிகழ்ச்சி நிரல்களுக்கும் தேவைகளுக்கும் பயன்படுகிறோம், பயன்படுத்தப்படுகிறோம் என்பதை நாங்கள் புரிந்து கொள்ளாதவரை இன்றைய வாழ்வு தொடர்ந்துகொண்டுதான் இருக்கப்போகிறது.

எங்களிடம் கையேந்த வேண்டியவர்களிடம் நாங்கள் கையேந்தி நிற்க வேண்டிய நிலைமை இன்று. ஆனால் உண்மையான வரலாறு வேறு. 100 ஆண்டுகளுக்கு முன் அல்லது அதற்கு முன் ஆபிரிக்கா தொடங்கி ஆசிய நாடுகள் வரை பொருளாதார வளங்கள் சார்ந்த ஆக்கிரமிப்புகள் கொள்ளைகளை சர்வதேச நாடுகள் நிகழ்த்தாமல் இருந்திருந்தால் இன்று வசதி படைத்த அதிகமான சர்வதேச நாடுகள் எமது நாடுகளில் கையேந்த வேண்டிய நிலைமை உருவாகி இருக்கும்.

யுத்தத்திற்கு முன் வடக்கு கிழக்கில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சர்வதேச சக்திகள், நாங்கள் அழிந்து கொண்டிருக்கும் பொழுது கண்டு கொள்ளாதவர்கள், வேடிக்கை பார்த்தவர்கள் இன்று தமது கழுகுப்பார்வைகளை வடக்கு கிழக்கு பக்கம் திருப்ப தொடங்கி உள்ளார்கள்.





# வாழ்க்கை முறை - அன்றும் இன்றும்

முப்பது வருடங்களுக்கு முன்பு வரை கூட இருந்த முறைகள் ஒன்று கூட இப்போது இருக்கும் விவசாயிகளிடம் இல்லை.

**வீட்டுக் கூரையில்:**

1. சுரை

வீட்டை சுற்றிலும்:


1. கொடி அவரை
2. பீர்க்கன்
3. புடலை
4. மஞ்சள் பூசணி
5. கீரைகள்
6. காய்கறிகள்

**கால்நடைகள்:**

1. நெய் மற்றும் மோருக்காக - பசுக்கள் (குறைந்தது ஒன்று கறவையில்),
2. உழவுக்கும் வண்டிக்கு கமலை ஏற்றத்திற்கும் என - பல ஜோடி காளை மாடுகள்.
3. முட்டைக்கும் இறைச்சிக்கு என கோழிகள் ஆடுகள்.

**வயக்காட்டில்:**

1. சோளம்
2. கம்பு
3. ராகி
4. சிகப்பு நெல்





5. தக்காளி,
6. அவரை
7. மிளகாய்,
8. கத்திரி
9. எள்
10. கடலை
11. வெண்டை

வரப்பில்:

1. அகத்தி
2. ஆமணக்கு
3. துவரை

## ஊடுபயிர்:

1. பச்சைப்பயறு
2. உளுந்து
3. தட்டை
4. கொண்டைக்கடலை
6. கொத்தமல்லி

உயிர் வேலியில்:

1. பிரண்டை
2. கோவை
3. நுரை பீர்க்கன்
4. சுண்டை
5. மூலிகை செடிகள், கொடிகள்.

## உரக்குழி:

கால்நடை சாணத்தை எடுத்து ஒரு குழியில் போட்டு மக்கு வதற்கு மாட்டு கோமியத்தை அதில் ஊற்றுவார்கள். தின மும் இந்த சாணம் அள்ளுவது ஒரு வேலையாக காலையிலும் மாலையிலும் செய்ய வேண் டியது இருக்கும். இது நன் றாக மக்கி நல்ல அடி உரமாக இருக்கும்.

## களத்து மேடு:

நெல், கம்பு, சோளம் விளைந்த பின் களத்து மேட் டில் அடித்தும் பின்பு மாடுகள் வைத்து மிதித்தும் தானியங் களை பிடிப்பார்கள்.

மாடுகளுக்கு தீவனமாக தட் டையையும் வைக்கோலையும் பின்பு படப்பு வேய்ந்து அதை கோடை காலத்திற்கு மாடுக ளுக்கு தீவனமாக பயன்படுத்து வார்கள். வைக்கோல் போரில் மழை பெய்தால் தண்ணீர் உள்ளே இறங்காதவாறு வேய வேண்டும்.

## சமையலுக்கு:

எள்ளையும், தேங்காயையும் செக்கில் ஆட்டி சமையலுக்கு பயன்படுத்துவர். சமையலுக்கு என்று எந்த காய்கறியும், தானி யங்களும் கடையில் வாங்கு வதே கிடையாது. கடையில் வாங்குவது என்றால் உப்பு மட்டுமே.

வீட்டிற்கு தேவையான பாசிப் பருப்பு, உளுந்தம் பருப்பு, தட்டை, கொண்டைக்கடலை, அனைத்தும் ஊடு பயிராக போட்டு வீட்டுக்கு தேவையான கிடைத்துவிடும்.

## கால்நடைகளுக்கு உணவு:

நாம் விளைவித்த தானியங்களில் விற்ப்பனைக்கும் மீதம் உள்ளது கோழி களுக்கும் கொடுப்பர். ஆடுகளுக்கும் பெரும்பாலும் உயிர்வேலியும் கழித்து போடப்படும் தழைகளும். வீட்டிற்கு விருந்தினர் யாரும் வந்தால் கோழி அடித்து குழம்பு வைப்பர்.


வீட்டு நிகழ்வுகளிலும் திருவிழா வின் போதும் முழு ஆட்டையும் விருந்து வைப்பார்கள்.

## அன்றைய நிலை:

இப்படி ஒன்று கூட வீணாகாமல் அனைத்துமே மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டு விவசாயம் செய் பவர் யாரிடமும் கையேந்தும் வழக் கம் இல்லை. விவசாயம் செய்வதற்கு வெளி ஆட்களை பயன்படுத்துவதற்கு பதில் சொந்த ஆட்கள்தான் பயன்ப டுத்தப் பட்டார்கள். குடும்பத்தில் பல பிள்ளைகளை பெற்றுக் கொண் டார்கள்.

## இன்றைய நிலை:

ஒரு காலத்தில் விவசாயம் செய்ப வரை மரியாதையுடன் பார்த்தார்கள். ஆனால் இன்று விவசாயிகளை ஏளன மாகவும் சாராயம் காய்ச்சி விற்பனை செய்பவராகவும் பார்க்கிறார்கள். இந்த நிலை வெகு விரைவில் மாறும்.





# வளர்ப்பிலே தவறுண்டோ?



**பெற்றோர்கள், பெற்றோர்களாகவே இருங்கள், ஒரு போதும் நண்பராகாதீர்கள்...!**

பணி முடிந்து வெகு தொலைவு பயணம் செய்து களைப்புடன் திரும்பிய நான் என் மனைவியை கடும் காய்ச்சலுடன் படுக்கையில் படுத்திருக்கக் கண்டேன். எனக்காக அந்தக் காய்ச்சலிலும் சமையல் செய்து உணவை மேசையில் மூடி வைத்திருந்தாள். நான் வழக்கமாக உண்ணும் எல்லாவற்றையும் சமைத்து வைத்திருந்தாள்.

அவளுக்குத்தான் என் மேல் எவ்வளவு கரிசனம்? உடல் நலம் சரியில்லாத நேரத்தில் கூட எனக்காக சமைத்து வைத்திருக்கிறாளே. சாப்பிட அமர்ந்த பின்தான் ஏதோ குறைவதை உணர்ந்தேன். டிவி பார்த்துக் கொண்டிருந்த என் வளர்ந்த மகளிடம், செல்லம்! என் மாத்திரையையும் தண்ணீரும் எடுத்துக் கொண்டு வா! என்று கூறினேன்.

அவளை நான் தொந்தரவு செய்ததை விரும்பாமல் கண்ணை உருட்டி அவள் அதிருப்தியைத் தெரிவித்து விட்டு நான் கேட்டதைக் கொண்டு வந்து கொடுத்தாள். ஒரு நிமிடம் கழித்து சாம்பாரில் உப்பு குறைவாக இருந்ததால் அவளை எடுத்துக் கொண்டு வருமாறு கேட்டேன்.

அவள் ச்சை! என்று கூறிக் கொண்டே காலை அழுத்தமாக வைத்து நடந்து போய்க் கொண்டு வந்து கொடுத்தாள். அவ்வாறு அவள் செய்தது நிச்சயம் நான் அவளைத் தொந்தரவு செய்ததை அவள் விரும்பவில்லை என்று எனக்குத் தெரிந்தது.



நான் சில நிமிடம் கழித்து மீண்டும் செல்லம்.. என்று அழைத்த போது அவள் கையில் இருந்த டிவி ரிமோட்டை பட்டென்று மேஜையில் வைத்து விட்டு...

அப்பா உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்? எத்தனை முறை தான் என்னை எழுப்புவீர்கள்? நானும்தான் நாள் முழுதும் வேலை பார்த்து விட்டு வந்திருக்கிறேன். எனக்கும் களைப்பாகத்தான் இருக்கிறது என்று கூறினாள்.

நான் ஸாரிம்மா என்று சொல்லி விட்டு சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து சமையபாத் சிங்க்கில் போட்டுவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டேன். என் கண்களில் இருந்து உருண்டோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

என் இதயம் அழுதது... நான் அவ்வப்போது எனக்குள் கேட்டுக் கொள்ளும் கேள்வி இது தான். இந்தக்கால இளைய தலைமுறையினர் ஏன் இது போல் நடந்து கொள்கிறார்கள்? நாம் அவர்களுக்கு அளவுக்கு அதிகமாக சுதந்திரம் கொடுத்தது தவறோ? அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுக்கத் தவறி விட்டோமோ? நாம் அவர்களை நண்பர்கள் போல் நடத்தியது தவறோ?

அவர்களுக்கு வாழ்க்கையில் ஆயிரம் நண்பர்கள் கிடைப்பார்கள். ஆனால் பெற்றோர்கள் நாம் மட்டும் தானே? பெற்றோருக்கான கடமையை நாம் செய்யாவிட்டால் வேறு யார் செய்யப் போகிறார்கள்? இன்று பிறந்த குழந்தைக்குக் கூட சுயமரியாதை இருப்பதைப் பற்றிக் கவலைப் படுகிறது இந்த உலகம். ஆனால் பெற்றோர்களுக்கு மட்டும் சுயமரியாதை இல்லையா?

அவர்கள் தங்கள் குழந்தைகளின் ஈகோக்களை வளர்த்து விட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா? இன்றைய பெரும்பாலான பெற்றோர்கள் கூறுவது இதைத் தான்... இந்தக் காலத்தில் எந்தக் குழந்தைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிகிறார்கள்? இதற்குக் காரணம் என்ன? இதே போல் தான் அன்று ஒரு பார்ட்டியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது, என் 50 வயது நண்பர் தன் கார் சாவியை மறந்து போய்க் காரிலேயே விட்டு விட்டு வந்து விட்டதால் தன் டீன் ஏஜ் பெண்ணை எடுத்துக் கொண்டு வருமாறு கேட்டார்.



அவள் 'நான் என்ன உனக்கு வேலைக் காரியா? நீயே போய் எடுத்துக் கொள்' என்றாள். அவரும் சிரித்துக் கொண்டே 'இல்லையம்மா.. நான் தான் உனக்கு வாழ்நாள் முழுவதும் சேவகன்' என்று கூறிக் கொண்டே போய் கார் சாவியை எடுத்துக் கொண்டு வந்தார்.

இதுவே இன்று சமுதாயத்தில் நடக்கிறது. இதற்குக் காரணம் என்ன? நாம் நமது குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையைப் பற்றியும், சுயமரியாதையைப் பற்றியும் கற்றுக் கொடுக்க விரும்பினால் முதலில் இதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவு பணக்காரர்களாகவும், புகழ் பெற்றவர்களாகவும் இருந்தாலும்... அவர்களுடைய பெற்றோர்கள் என்றும் பெற்றோர்கள் தான்!! பிள்ளைகள் என்றுமே அவர்களைப் பெற்றோருக்கு சமமாக மாட்டார்கள். பெற்றோருக்கு நான் சொல்ல விரும்புவது இது தான். நீங்கள் உங்கள் குழந்தைகளை நண்பர்களாக நடத்தாதீர்கள்... அவர்களுக்கு வாழ்க்கையில் ஆயிரம் நண்பர்கள் கிடைக்கலாம். ஆனால் பெற்றோர்கள் நீங்கள் மட்டுமே.

அதனால் அவர்களை நீங்கள் வளர்ப்பதற்கு விதிமுறைகளை வகுப்பதற்கும், அந்த விதிமுறைகளை அவர்கள் மதிப்பதற்கும், அவர்களைக் கட்டாயப் படுத்துவதற்கு ஒரு போதும் அஞ்சாதீர்கள்.

# ஹைக்கூ கவிதைகள்

தவறை நேர்த்தியாய் செய்ய
இன்னுமொரு தயார்ப்படுத்தல்
அடுத்த தேர்தல்.

---

நாத்திக பிரசாரம் முடிந்து
வீடு திரும்பியவன்
குளித்து தரித்தான்
பட்டை விபூதி.

---

வயிற்றுப் பசிக்கு இரந்து உண்கிறான்
ஊருக்கு உணவளித்த விவசாயி.

---

விடுதலை நாளிலும்
அடுப்படியில் வேகிறாள்
விடுப்பே எடுக்காத அம்மா.

---

மண்ணைத் தொட்டு
வணங்கின மரங்கள்
இயற்கையின் சீற்றம்.

---

அழுது புலம்பியும்
அடங்க மறுத்தது
மாரி காலத்து மழை.

---

துணிக்கடை பொம்மையின்
உடை பார்த்து
பெருமூச்சு விட்டாள்
ஏழைச் சிறுமி.

---

பௌர்ணமி சந்திரன் அவசரமாக
ஒளிந்துகொண்டான்
என்னவள் வந்து
கொண்டிருக்கிறாளோ?

---

காகிதப் பூவைப் பார்த்து
ஏளனமாகச் சிரித்தது
ஆயுசு குறைந்த அல்லிப்பூ.

---

பட்டினியால் மடிந்தவனுக்கு
வாய்க்கரிசி போட்டு
பத்திரமாக அனுப்பி வைத்தது ஊர்.

பிக்குவிடம் ஆசி பெற்றபின்
மேடையில் முழங்கினான்
எல்லா மதமும் என் மதம் என்று.

---

வன்புணர்ந்தவர்கள் வரிசையில் நிற்க,
சிறுமியைச் சுட்டி நீண்டன விரல்கள்
அவள் உடை காரணமாயிற்று.

---

வெள்ளையும் சள்ளையுமாகத் திரிகிறான்
கறுப்புப் பணத்தை பதுக்கியவன்.

---

நசுக்கப்பட்டது பூண்டு
அழுதன கண்கள்.

---

அவசர சிகிச்சையை எதிர்பார்த்து
அடிபட்ட வண்ணத்துப்பூச்சி.

---

மனக்கணக்குப் பார்க்கிறான் பாமரன்
கால்குலேட்டர் தேடுகிறான் படித்தவன்
நடைமுறைக் கல்வி.

---

உந்துருளியில் பயணித்தபடி
கைபேசி பாவனை
பறிபோனது கால்.

---



மாடிகள் கட்டும் கட்டடத் தொழிலாளியின்
வீட்டுக் கூரையெங்கும் பொத்தல்.

---

மனிதவள மேம்பாடு
பற்றிய கலந்துரையாடல்
மேடையின் கீழ் மனிதப் புதைகுழி.

---

பன்னாட்டு அதிபர்கள் உதவியுடன்
அடக்கப்பட்டது ஒடுக்கப்பட்ட இனம்.
போரியல் வெற்றி.

---

அடுத்த ஐந்து வருடங்களுக்கு
எஜமானனைத் தேர்ந்தெடுத்தார்கள்
ஏமாளிகள்.
காய்த்துப்போன விரலில் தேர்தல் மை.

---

அரசமர அடிவாரத்தில் இருந்த பிள்ளையார்
இடம்பெயர்ந்தார்
அங்கு குடியேறினார் புத்தர்.

---

வயோதிப மடத்திலிருந்த அம்மா
மறுபடி வீட்டிற்குள் வந்தாள்
புகைப்படமாக.

---

நொந்து நூலாகியோர் வாழ்வு கண்டு
பூமிதான் புலம்பியிருக்க
வேண்டும் - பதிலாக
அழுதது வானம்.

---

அழித்தவரை அன்புடன் அணைத்து
ஒரு ‘செல்ஃபி’
புலியைப் பார்த்து பூனை போட்ட சூடு.

---

என்னைத் தவிர என்னத்தைக்
கிழித்தாய் என
ஏளனம் செய்கிறது
ஆண்டிறுதியில் காலண்டர்.

பொழில்

# பிரபாகரன் ஒரு அதிசயப் பிறவி




# தேசியத் தலைமையை நேசித்த தமிழோசை ஆனந்தி

**போர்க்காலத்தில்** பல செய்தித் தணிக்கைகள் மத்தியிலும் தாயக மக்களுக்காக களத்தில் நிகழும் நிகழ்வுகளை தொகுத்து உடனுக்குடன் வழங்கி வந்தார் பி.பி.சி தமிழோசையில் ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்கள். அவர் பணியாற்றி வந்த காலத்தில் தாயக உறவுகளின் அவலங்களையும் தமிழோசை வாயிலாக உலகெங்கும் கொண்டு சென்றதில் பெரும் பங்கு வகித்தார்.

தமிழ் ஒலிபரப்பு துறையில் ஒரு முன்னோடியாக இருந்த 'ஆனந்தி அக்கா' பிபிசி தமிழ் சேவையில் இணைந்த முதல் தமிழ்ப் பெண் மணியாக, பல தடைகளைத் தாண்டி பிபிசி தமிழோசையின் இயக்குநராக உயர்ந்த பெருமைக் குரியவர்.

பல ஆண்டுகளாக தாயக மக்களுக்கு செய்திச் சேவையை தொடர்ந்து வழங்கி வந்த பிபிசி 'ஆனந்தி அக்கா' கடந்த பெப்ரவரி 21 இல் இலண்டனில் இயற்கை எய்தினார்.

கொடூரமான போர் நடந்த காலத்தில் துணிகரமான தாயகம் வந்து தமிழ் மக்களின் உண்மை நிலையை உலகறியச் செய்தார். விடுதலைப் புலிகளின் தலைவர்








வேலுப்பிள்ளை பிரபாகரனை, பிபிசியின் சார்பில் முதன் முதலாக சந்தித்து நேர்காணலை சர்வதேச ஊடகங்கள் மூலமாக வெளியிட்டார்.

தமிழர் உலகம் மாத்திரமன்றி, சர்வதேசம் எங்கும் அப்போது மூத்த ஊடகவியலாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்துடனான நேர் காணல் பலத்த வரவேற்பை பெற்றது.

இலண்டனிலிருந்து கொழும்பு சென்றதுமே இலங்கை அரசின் கெடுபிடியை அவர் சந்தித்தார். அவரது பயணத்திட்டம் என்ன? பயணத்தின் நோக்கம் என்ன? என்பது பற்றி எல்லாம் துருவித் துருவி விசாரிக்க ஆரம்பித்தவர்கள் பின்னர் அவரை தொடர்ந்து கண்காணிக்கவும் செய்தார்கள்.

அப்போது வவுனியாவுக்கு முன் வரை மட்டுமே இலங்கைப் படைகளின் ஆதிக்கம் இருக்கும். அதன் பிறகு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிக்குள் வருவதற்குள் பல்வேறு தடைகளை அரசு ஏற்படுத்தி இருந்தது.

அதையெல்லாம் மீறி புலிகளின் பாதுகாப்புப் பகுதிக்கு வந்த அவர் யாழ்ப்பாணத்தில் வைத்து தேசியத்தலைவர் பிரபாகரனை சந்தித்தார்.

பலருக்கும் நினைவிருக்கும். அவருடைய நேர்காணலை உலகெங்கும் தமிழ் மக்கள் பார்த்து வியந்தனர். அந்த நேர்காணலின் பின்னரே பிரபாகரன் ஒரு அதிசயப் பிறவி என்றார் பிபிசி புகழ் ஆனந்தி அக்கா.

'தமிழோசை ஆனந்தி' என தமிழ் உலகம் அறிந்திருக்கும் திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம் பி.பி.சி அவர்கள் தமிழோசையில் பணியாற்றி வந்த காலத்தில் தாயக உறவுகளின் அவலங்களையும் தமிழோசை வாயிலாக உலகெங்கும் கொண்டு சென்றதில் பெரும் பங்கு வகித்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்தவரான ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்கள், இலங்கை வானொலியில் உருவான பல நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றவர். அத்துடன் அக்காலத்தில் வானொலியில் சிறந்த அறிவிப்பாளராகவும் திகழ்ந்தவர்.

இங்கிலாந்துக்கு 1970 காலகட்டத்தில் குடிபெயர்ந்த ஆனந்தி சூரியப்பிரகாசம்

பி.பி.சி தமிழோசையின் பகுதிநேர அறிவிப்பாளராக ஆரம்பத்தில் பணியாற்றி வந்தார். பின்னர், நிரந்தர அறிவிப்பாளராகிப் பொறுப்புகள் ஏற்றுச் செயற்பட்டார்.

மூன்று தசாப்தங்களாக பி.பி.சி தமிழோசையில் பணியாற்றிய அனுபவம் கொண்ட அவர் பல இளைய தலைமுறையினரை ஊக்குவித்து பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

இறுதியாக அவர் தமிழோசையில் இருந்து ஓய்வு பெற்றாலும், தமிழர் கலாசார பண்பாட்டு நிகழ்வுகளில் இனிய முகத்துடன் எப்போதும் காணலாம்.

தமிழ் கூறும் நல்லுலகம் ஆனந்தி அக்காவின் கணீரென்ற குரலை ஒரு போதும் மறவாது. தமிழ் கூறும் நல்லுலகிற்கு அரும் பணிபுரிந்த ஆனந்தி அக்காவிற்கு அஞ்சலிகளும் ஆராதனைகளும் உரித்தாகட்டும்!



# தீஞ்சுவை மொழி எம் தமிழ்மொழி




கட்டாயக் கல்வியாகட்டும்
தாய்மொழி!
தரணியை ஆளட்டும்
இந்த மேன்மொழி!

இருபத்தாறு எழுத்தைப் படிக்க
காட்டும் ஆர்வம்
இருநூற்று நாற்பத்தேழு எழுத்தில்
தொலைந்து போக விடலாமோ?

கால வெள்ளத்தில்
தொலைந்துபோன
மொழிகளிடையே
அழியாமல், சிதையாமல்
உயிர்ப்புடன் தவழ்வது
நம்மொழி அது
தமிழ்த் தாய்மொழி!!

இலக்கணத்தில் புதுமை கண்டதும்
எழுத்து, சொல், பொருள் என
மூன்று அதிகாரங்களாய்
இலக்கணம் கண்டதும்
நம்மொழி
அது
தாய்த் தமிழ்மொழி!!

எழுத்துக்கு இலக்கணம் கண்ட
பிறமொழி போலல்லாது
பொருளுக்கு இலக்கணம் கொண்டு
வாழ்வுக்கே இலக்கணம் அமைக்கும்
சிறந்தமொழி
அது தரணியில்
தங்கமொழி - எம்
தாய்த் தமிழ்மொழி!!

மானிட வாழ்வை
அகம் புறம் என
இரு வகையாக்கி
இலக்கணம் கண்ட மொழி
எம்மொழி - அது
தாய்த் தமிழ்மொழி!!

பத்துப்பாட்டும் பதினெண்
கீழ்க்கணக்கும்
எட்டுத் தொகையும்
பதினெண் மேல்கணக்கும்
ஐம்பெரும் காப்பியமும்
ஐஞ்சிறு காப்பியமும்
பெருமையோடு
பறைசாற்றும் மொழி
எம்மொழி - அது
தாய்த் தமிழ்மொழி!!

பன்னிரு திருமுறைகள் நல்வழி
மூதுரை உலகநீதி கொன்றை வேந்தன்
நாலாயிரம் திவ்ய பிரபந்தங்கள்
வழிகாட்டும் ஒரே மொழி
எம்மொழி - அது
தாய்த் தமிழ்மொழி!!

தமிழ்க்கோவிலில் குடியிருக்கும்
தொல்காப்பியம் அகத்தியம்
தண்டியலங்காரம்
யாப்பெருங்கலக்காரிகை
இலக்கண நூல்கள்
எம்மை வழிநடத்தும் மொழி - அது
தாய்த் தமிழ்மொழி!!

அமிழ்தமாய் இனிக்கும் சிறப்புக்குரியவள்
உயிருக்கு உயிராக எமை வழி
நடத்துபவள் தமிழ்
தமிழ் இல்லையேல்
எங்கும் நாமில்லை!!

தீந்தமிழ் மொழி வாழ்க!!
உன் சிறப்புகள் ஓங்குக!!
பண்டை மொழியே வாழ்க!!
பண்புடன் எமை வழி நடத்துவாய்
நீ வாழ்க!! வாழ்க!!

(21/02/2025 அன்று
உலக தாய்மொழி
தினத்தையொட்டி
எழுதப்பட்டது.)

**கார்த்திகை**

# வணல்

**கொற்றவை** அங்கம்: 28



**என்ன** வேலை செய்தாலும் ஆனந்தனின் அடிமனதில் டானியல் அண்ணரின் திட்டமும் அதில் வெண்ணிலா பங்குபற்றி செய்ய வேண்டிய வேலைகளும் என்று பல விசயங்கள் ஓடிக் கொண்டிருந்தன. இவற்றைப் பற்றி தொடர்ந்து பேச வேண்டும் என்று, 'நேரம் கிடைக்கும் போதெல்லாம் தன்னை வந்து பார்க்க முடியுமா?'என்று ஏற்கனவே டானியர் அவனிடம் கேட்டிருந்தார்.

அவனுக்கு அதில் எப்போதுமே மகிழ்ச்சிதான். நாட்டுப் பற்றும் சமூக உணர்வும் கொண்டவர்கள் டானியல் அண்ணரின் குடும்பத்தவர். அவர்களிடம் மனம் விட்டுப் பேசலாம். இப்போது யார் அவ்வளவு உணர்வுடன் இருக்கிறார்கள்? அப்படி உணர்வுள்ளவர்களே இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. நாட்டுப்பற்றுள்ளவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிக்காட்டவே இப்போது பயப்படுகிறார்கள். சேர்ந்து இருந்து கதைத்துவிட்டு யார் காட்டிக் கொடுத்து கழுத்தறுப் பார்களோ தெரியாது என்ன அச்சம் கிட்டத்தட்ட அவர்களை தங்கள் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த இயலாமல் செய்து விட்டது.

டானியல் அண்ணருக்கு ஆனந்தனை நன்கு தெரியும். நல்ல நம்பிக்கையும்கூட. அதனால் கஷ்டமோ நஷ்டமோ அவன் பயப்படாமல் அவருடன் பேசலாம். தவிரவும், இந்த வேலைத் திட்டத்தில் வெண்ணிலாவின் பங்கு குறித்த அவனது சந்தேகங்கள் அனைத்தும் தீருமட்டும் அவன் அதைப்பற்றி பேச வேண்டும், பேசுவான்.

டானியல் அண்ணர் வீட்டில் வேறொருவரும் இருந்தார். 'அறக்கட்டளையின் சட்டத்தரணிகள் குழுவிற்கு பொறுப்பானவர், அவர் பெயர் திலகன்' என்று அறிமுகம் செய்து வைத்தார் டானியல் அண்ணர். ஆனந்தனை அறிமுகம் செய்தபோது, 'இவரை நான் வசந்தன் என்றுதான் கூப்பிடுவேன்'என்று சொல்லி அவனைப் பற்றிய விபரங்களை திலகனுக்கு சொன்னார் டானியல்.

தனக்கு முன்பே தன்னை உயர்த்திப் புகழ்வது ஆனந்தனுக்கு ஒருவித கூச்சத்தைக் கொடுத்தது. அதேசமயம் டானியல் அண்ணர் தன்னில் இவ்வளவு மதிப்பும், மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருப்பதை முதன் முதலில் இப்போதுதான் உணர்ந்த ஆனந்தனுக்கு கண்கள் பனித்தன.

''அதெல்லாம் ஒண்டுமில்லை சேர்! செய்ய வேண்டி இருந்தது காலத்தின் கடமை. பெரியவருக்கு கீழ் சேவை செய்ய எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைச்சதைத்தான் நான் பெருமையா நினைக்கிறன். மற்றபடி... சித்திரவதையளைக் கடந்து எப்பிடி தப்பி வந்தன் எண்டு எனக்கும் தெரியேல்லை. இன்னும் ஏதோ செய்யக் கிடக்கு எண்டுதான் கடவுளும் என்னை விட்டு வைச்சிருக்கிறார் எண்டு என்ரை மனுசி சொல்லுவா.'' ஆனந்தன் பணிவாக மறுதலித்தான்.

அவ்வளவையும் ஆர்வமாகக் கேட்ட திலகரின் முதலாவது எதிரொலிப்பே..


''அப்ப இவரையும் அறக்கட்டளையின்ரை ஆலோசகர் குழுவிலை நிரந்தர உறுப்பினர் ஆக்கலாமே!'' என்பதுதான்.

ஆனந்தனும், டானியலும் ஒரு சேர மறுத்தார்கள்.

''இல்லையில்லை. அதிகார பூர்வமா எதிலயும் இவற்றை பேர் வேண்டாம். அவர் படாத பாடு பட்டிட்டார். காணும். ஆனா, காலம் முழுக்க எங்களோடயே இருப்பார். ரெஜினா மாதிரி. வெளியில தெரிய வேண்டாம். பிற்காலத்தில வெண்ணிலாவுக்கும் அதுதான் உதவியாக இருக்கும்.''

''இல்லை நான் என்ன நினைச்சன் எண்டால் பதினெட்டு வயசு வராமல் வெண்ணிலா அதிகாரபூர்வ முடிவுகள் எதுக்கும்





பொறுப்பு நிக்கேலாது... அப்ப அவ படிச்சு முடியு மட்டும் வசந்தன் நிண்டால் பிறகு அவ பொறுப்பெடுப்பா எண்டு நினைச்சன்... இப்ப விளங்குது.''

''அதுக்கு நான் இருக்கிறன். அவள் எங்களுக்கும் பிள்ளை மாதிரித்தான்.''

ஆனந்தன் தனக்கிருந்த சந்தேகங்கள் அனைத்தையும் கேட்டுத் தீர்த்துக்கொண்டான். வெளிநாடுகளில் இருந்து அறக்கட்டளைக்கு தொடர்ச்சியாக பணம் வருவதற்கான வழிகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தன. டானியல் அண்ணர் நீண்ட நாட்களாகவே இதுபற்றி அலசி ஆராய்ந்து ஒரு பூரண திட்டத்தை தயாரித்திருந்தார். அறக்கட்டளையின் பெயரும் சின்னமும் தயாராகி பதிவு செய்யப்பட்டவுடன் ஆரம்பத்திலிருந்தே அனைத்தும் சுமுகமாக இயங்குவதற்குரிய வகையில் அனைத்தும் நேர்த்தியாக செய்து முடிக்கப்பட்டிருப்பதை வியப்புடன் பார்த்தான் ஆனந்தன்.

''அறக்கட்டளைக்கு ரெண்டு பேர் எடுத்திருக்கிறம். ஒண்டு ஆணிவேர், மற்றது வசந்தம். இதில எது பிடிக்குதோ அதை எடுப்பம். '' என்றார் டானியல்.

''ஆணிவேர் பொருத்தமா இருக்கும்...'' என்றார் திலகன்.

''ரெஜினாவுக்கு ஒரு ஆசை... வெண்ணிலா எடுக்கிற பேரைத்தான் வைக்க வேணும் எண்டு தொடுபிடியா நிக்கிறாள் ... சின்னம் எடுக்கிறதிலயும் அவளின்ரை அபிப்பிராயம் வேணுமாம்.... என்ன வசந்தன்? வெண்ணிலாவோடை கதைக்கவோ?''

''அண்ணை...! இண்டையில இருந்து நீங்கள் என்னட்டை அனுமதி எடுக்கக் கூடாது. என்ன வேணுமோ அதை உடனை உடனை அவளோட கதைச்சுக் கொள்ளுங்கோ. நான் எங்க போறன்? நானும் அவளுக்கு நிழல் மாதிரித்தானே இருப்பன். ஒவ்வொருக்காலும் என்னட்டையோ சாந்தியிட்டையோ கேக்க வேண்டாம். சரியோ அண்ணை?'' உரிமையுடன் கண்டித்தான் ஆனந்தன்.

பலத்த யோசனையின் பின்னர் வெண்ணிலா 'வசந்தம்'என்ற பெயரை தெரிவு செய்தாள்.

''ஆணிவேரும் நல்ல அர்த்தமுள்ள பேர்தான்... ஆனால் சின்னம் கவர்ச்சியா இராது. வசந்தம் எண்டால் பாத்த உடனை மனசுக்கு குளிர்மையாக இருக்கும். ஒரு நம்பிக்கை வரும். சின்னம் சனத்துக்கு மறக்காது. அதுதானே எங்களுக்கு வேணும்...''

அடர்ந்த பச்சைப்பசேல் என்ற மரங்களில் பறவைகள், கூடுகள் என்பனவும் மரங்களின் அடியில் மக்கள், ஆடு, மாடு இளைப்பாறுவது போலவும் சின்னம் அற்புதமாக வரையப்பட்டிருந்தது.

அதுவும் வெண்ணிலாவின் யோசனைதான். அறக்கட்டளை பதிவுக்கு அனுப்பப்பட்டு விட்டது.

இனி அவனுக்கு இரட்டிப்பு வேலை. குடும்பத்துக்காக உழைக்கவும் வேண்டும்.. அதே சமயம் அவனுக்கு மிகவும் பிடித்த சமூகத் தொண்டுகளையும் செய்யலாம்.

'பிள்ளையின்ரை கவனம் படிப்பு விசயத்தில சிதறாமல் பார்த்துக்கொள்ள வேணும்..' பலதரப்பட்ட திட்டங்களை மனதுள் அடுக்கிக் கொண்டான் ஆனந்தன்.

வேலையிடத்தில் வேலைப்பழு அதிகமாகியிருந்தது. அதை ஆனந்தன் விரும்பித்தான் ஏற்றுக் கொண்டிருந்தான்.

''நீர் புதுக்கடையை பொறுப்பெடுக்க மறுத்தது எனக்கு கொஞ்சம் மன வருத்தம்தான்... எல்லாரும் இப்பிடி ஒரு சந்தர்ப்பம் எப்ப வரும் எண்டு காத்துக் கொண்டிருக்கிறாங்கள். ஆனா நீர் ஒரு முடிவெடுத்தா அதில உறுதியா நிக்குறீர்... அதால எனக்கு உம்மில இருந்த மதிப்பு இன்னும் கூடியிருக்கு ஆனந்தன்.... சரி! அதை விடும். எனக்கு உம்மை இப்பிடியே வைச்சிருக்க விருப்பமில்லை...''

''நீர் நல்ல நிர்வாகத் திறமையுள்ள ஒரு ஆள். நேர்மையா உழைக்கிறனீர். எனக்கு உம்மை விட விருப்பமில்லை. உங்கடை குடும்ப நிலையும் தெரியும்... அதுகும் கொஞ்சம் உயர வேண்டாமோ? நான் உமக்கு சில பொறுப்புகள் தரப்போறன்''

ஆனந்தனின் துணுக்குற்ற முகத்தைப் பார்த்ததும்,


''பயப்பிட வேண்டாம். எந்த ஒரு தப்பான இடத்திலயும் உம்மை விடமாட்டன். எனக்கு வன்னிப் பகுதியிலயும் யாழ்ப்பாணத்திலயும் இருக்கிற என்ரை பிஸினெஸ்ஸை நிர்வகிக்க ஒரு ஆள் வேணும் எண்ட உடனையே நான் உம்மைத்தான் நினைச்சனான். ஓடித்திரியிற வேலை. ஆனா வேலை சுகம். எல்லா இடங்களிலயும் உண்மையா நடக்கிறதை நேரில போய்ப்பார்த்து என்னட்டை நேரில றிப்போட் பண்ண வேணும்.''

ஆனந்தன் யோசிப்பதைப் பார்த்து.

''சம்பளம் கூட்டித் தருவன். உம்மடை பாவனைக்கு எண்டு ஒரு வான் தருவன். நிர்வாகப் பொறுப்பாளர் பதவி ... வீட்டிலயும் கதைச்சு நாளைக்கு சொல்லும்... ஆனா மாட்டன் எண்டு மட்டும் சொல்லப்படாது''.

அவன் எதிர்பாராத விதமாக சாந்தியும் ஒத்துக்கொண்டாள்.

''நீங்கள் வேலை முடிஞ்சு வரேக்க... எனக்கு நான் சும்மா இருந்து உங்களை இப்பிடி முறிய விடுறன் என்று ஆற்றாமையா இருக்கும். அப்பிடி களைச்சுப் போய் வருவியள். இது ஓடித் திரிஞ்சாலும் உடம்பை முறிக்காத வேலை. சம்பளமும் கூட வரும். பிள்ளைன்ரை படிப்புக்கு இனி கூடச் செலவழிக்க வேணும். அதோட..... மறந்திடாதையுங்கோ. வெங்கி அண்ணையும் நீங்கள் இருக்கிறியள் எண்ட நம்பிக்கையோடதான் உயிரை விட்டவர். அங்கையும் மூண்டு படிக்கிற பிள்ளையள் இருக்கு...''





டானியல் அண்ணையும் வதனியும்கூட அந்த வேலையை ஏற்றுக் கொள்ளச் சொன்னார்கள்.

''வசந்தத்தின்ர வேலையளுக்கு உதவியா இருக்கும். மக்களின்ரை பார்வைகளையும், பிச்சனைகளையும் இலகுவா அறிய உதவும்.'' என்றார் டானியல்.

ஆனந்தன் எதிர்பார்க்கவே இல்லை. சரி என்று சொன்னது தான் தாமதம், புத்தம்புது வான் ஒன்றை கொண்டு வந்து இறக்கிவிட்டார் மண்டிக்காரர். இதுவரையும் அவன் மண்டிக்காரர் என்றே சொல்லிப் பழகி விட்டான் ஆனந்தன். அவருடைய பெயர் தில்லைநாதன். ஆனால், 'தர்மா' என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். இனி நாங்களும் அவரை தர்மா என்று அழைப்போம்.

அடுத்த சில வாரங்களை ஒழுங்குபடுத்தவே ஆனந்தனுக்கு நேரம் சரியாக இருந்தது. வெண்ணிலா கபொத உயர்தர கல்வியை ஆரம்பித்து விட்டாள். அவள் வேண்டாம் என்று மறுதலித்தாலும், அவளுக்கான பிரத்தியேக வகுப்புக்கான சரியான, நம்பிக்கையான ஆசிரியர்களை கண்டறிந்து அந்த வகுப்புகளில் சேர்த்து விட்டான் ஆனந்தன்.

வெங்கியின் பையன்களில் ஒருவன் விஞ்ஞான பாடத்தில் கொஞ்சம் குறைவாகப் புள்ளிகள் எடுத்திருப்பதாக காவேரி சொன்னாள். அவனுக்கும் ஒரு ஆசிரியரை போடலாமா என்று கேட்ட ஆனந்தனை கடிந்து கொண்டாள் வெண்ணிலா.

''அப்பா! நான் சொல்லிக் குடுக்க மாட்டனோ? விதுரனை என்ரை பொறுப்பில விடுங்கோ. அடுத்த தரம் அவன் ஃபுல் மாக்ஸ் எடுக்க நான் பொறுப்பு...'' விதுரன் வார விடுமுறை நாட்களில் வந்து படிப்பதாக ஏற்பாடாயிற்று.

தர்மாவின் யாழ்மாவட்ட வணிக மையங்களில் அநேகமானவைகளை அவனுக்குத் தெரியும். ஆனாலும் எல்லா இடத்துப் பொறுப்பாளர்களையும் அழைத்து ஒரு கூட்டம் ஒழுங்கு செய்தார் தர்மா. அதில் 'இனி மாவட்ட நிர்வாகப் பொறுப்புகளை ஆனந்தன் பார்த்துக் கொள்வார். அவருக்கு நீங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்' என்று அறிமுகப்படுத்தி வைத்தது ஆனந்தனுக்கு பேருதவியாக இருந்தது.

கூட்டத்தில் இருந்த சிலருக்கு அவன் பொறுப்புக்கு வந்தது பிடிக்கவில்லை என்பது அவர்கள் முகத்திலேயே தெரிந்தது. ஒருவேளை அவர்கள் ஏதும் தில்லுமுல்லுகள் செய்திருந்து அதை அவன் பிடித்து விடுவான் என்று பயந்திருக்கலாம், அல்லது இவ்வளவு காலமாக தாங்கள் வேலை செய்யும்பொழுது அவர்களுக்கு கிடைக்காமல் அந்த வேலை அவனுக்குக் கொடுக்கப்பட்டதில் வந்த வெறுப்பாக இருக்கலாம்.

இதுவரை காலமும் வேலைகளைத் தட்டிக் கழித்து சோம்பேறியாக இருந்து சம்பளத்தை மட்டும் ஒழுங்காக வாங்கி வந்தவர்கள் இனி வேலை செய்ய வேண்டுமே என்ற எண்ணமாகவும் இருக்கலாம் அல்லது 'எங்கள் இடத்துக்கு வந்து இவர் முதலாளித்தனத்தைக் காட்டவோ?' என்ற கோபமாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அவனுடைய வேலை 'சப்' பென்று போய்விடாமல் சுவாரசியம் நிறைந்ததாக இருக்கப் போகிறது என்று மட்டும் தெரிந்தது.

வன்னியில் அவனை அறிமுகப்படுத்தி வைக்கும் கூட்டத்திற்கு அவனை தன்னுடைய காரில் வருமாறு அழைத்தார் தர்மா. ஆனந்தன் மறுத்துவிட்டான்.

''முதலாளியுடன் ஒட்டிக்கொண்டு வருவது அங்கு என்மீது ஒரு தப்பான பார்வையை விதைத்து விடும்'' என்றான் அவன். அவர் புரிந்து கொண்டார். உண்மை என்னவென்றால் அவருடன் ஒரே காரில் உரிமையாகப் பயணிக்க ஆனந்தன் விரும்பவில்லை. அவன் தனக்குத் தரப்பட்டிருந்த சிறிய ரக வானில் புறப்பட்டுப் போனான். புதிய வாகனம். ஓட்டத்துக்கு அட்டகாசமாக இருந்தது.

கூட்டத்தின் பின்னர் அவனை தன்னுடன் அமர்ந்து உணவருந்த வற்புறுத்தினார் தர்மா. வேலை விடயமாகக் கதைக்க வேண்டும் என்றார். வன்னிப்பகுதியின் கடந்த ஐந்து வருட கணக்கேடுகளை சரி பார்க்குமாறு அவனிடம் சொன்னார் அவர்.

''உம்மட்டை மட்டும்தான் சொல்லுறன். கட்சிக்கார என்ரை நண்பரைத் தெரியும்தானே...? அவரும் நானும் கூட்டா வன்னியில சில வேலையள் செய்தனாங்கள். அவர் என்னை ஏமாத்துறார் எண்டு எனக்கு கொஞ்சக் காலமாகவே சந்தேகம் இருக்கு.... எங்களுக்கிடையில சண்டை எண்டு ஒண்டுமில்லை... ஆனா, கொஞ்சம் விரிசல் விழுந்திட்டுது. அவரின்ரை கணக்கை முடிச்சு பிஸினெஸ்ஸை என்னட்டையே எடுத்தாச்சு. என்ன குளறுபடி பண்ணி வைச்சிருக்கிறார் எண்டது எனக்கு சரியாத் தெரிய வேணும்.''

யாழ்ப்பாணத்தில் பிரச்சனைகள் மறுபடியும் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டன. சனாதிபதி தையிட்டி விகாரையை இடிப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. மக்கள் யாரும் மனமுவந்து விகாரை கட்டுவதற்கென காணியை அன்பளிப்பு செய்யவில்லை. யுத்தம் முடிந்து இத்தனை வருடங்களாகி விட்டன என்று மார் தட்டுகிறார்கள். ஆனால் இன்னமும் எமது மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியபாடில்லை.

அடாத்தாகப் பிடிக்கப்பட்ட அவர்கள் காணிகளை மீளத் தாருங்கள் என்றுதானே கேட்கிறார்கள்? விகாரையைச் சூழவுள்ள காணிகள் விகாரைக்கு சொந்தமானவை என்று சொல்ல ஏன் அவர்கள் வெட்கப்படவில்லை?


உண்மையில் தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்று கதிரைக்கு வந்த அரசு, எல்லோரும் சமம் என்று பேசிவிட்டு முந்தைய அரசுகளைப் போன்றே சிங்கள மக்களுக்கான, சிங்கள தேசத்துக்கான அரசியல் செய்யும் புதிய அரசின் சாயம் வெளுத்து விட்டது.

சில தமிழ்க் கட்சிகள் தமது கட்சியின் லாபத்துக்காக தையிட்டி விகாரை பிரச்சனையை கையில் எடுத்திருந்தாலும் எந்தக் கட்சியும் சாராது, எமது காணிகளை மீட்டெடுப்பதற்காக என்று மக்கள் அமைதியான போராட்டங்களில் இறங்கியிருந்தார்கள். இந்த விடயத்தில் எல்லோரும் ஒன்றாகக் கூடி இந்தப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டும் என்பது அநேகமானோரின் பார்வை.

அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டதும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதும் மக்களை கொந்தளிக்க வைத்திருக்கிறது.

சிங்களவர்களே இல்லாத இடத்தில் பௌத்த விகாரைக்கு என்ன வேலை?

**தொடரும்...**



# சாந்தனுக்கு துயிலாலயம் அங்குரார்ப்பணம்









மறைந்த சாந்தனின் ஓராண்டில் துயிலாலயம் வெள்ளிக்கிழமை (28.02.2025) எள்ளங்குளம் இந்து மயானத்தில் அவரை புதைத்த இடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பல ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த பின்னர் விடுதலையான நிலையில் தமிழகத்தில் சாந்தன் உயிரிழந்தார்.



அவரின் உடல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு தாயக மண்ணில் விதைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 33 ஆண்டுகள் தாயக மண்ணுக்காக சிறையிருந்து சிறையிலேயே சாவடைந்த சாந்தனின் முதலாம் ஆண்டு நாளில் அவர் விதைக்கப்பட்ட இடத்தில் துயிலாலயம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாந்தனின் தாயார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.